# தமிழ் மக்களும்
# சமசமாஜக் கட்சியும்

- பிரசங்கங்கள்
- தீர்மானங்கள்
- தஸ்தாவேஜுகள்

என்.எம். பெரேரா
கொல்வின் ஆர். டி சில்வா
லெஸ்லி குணவர்த்தன
எட்மன்ட் சமரக்கொடி
டொரிக் டி சூசா
பெர்னட் சொய்ஸா

முகவுரை
வெ. காராளசிங்கம்

# தமிழ் மக்களும்
# சமசமாஜக் கட்சியும்

**தமிழ்பேசும் மக்கள் சார்பில்**


என். எம். பெரேரா
கொல்வின் ஆர். டி. சில்வா
லெஸ்லி குணவர்த்தன
எட்மன்ட் சமரக்கொடி
டொறிக் டி. சூஸா
பேர்னுட் சொய்ஸா



VINAYAGAR
KD/12
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY


ஆகியோர் பாராளுமன்றத்தில்
ஆற்றிய சொற்பொழிவுகளும்,
கட்சியின் பணியும்.

முகவுரை : வை. காராளசிங்கம்


இலங்கை சமசமாஜக் கட்சி,
(நான்காவது சர்வதேசியம் - இலங்கைக் குழு)
47 ட்றீபேக் அவெனியூ, கொழும்பு 10,
15/14, மின்சார வீதி, யாழ்ப்பாணம்.

அக்டோபர் 1961.

# நன்றியுரை

இப்பிரதியை வெளியிட, பணம் அளித்த பல அனுதாபிகளுக்கும், மொழிபெயர்த்து உதவிய பல நண்பர்களுக்கும், படங்களைப் பிரசுரிக்க அனுமதி அளித்த வீரகேசரி பத்திரிகைக்கும், அச்சிட்டுத் தந்த ஈழநாடு லிமிட்டெட் அச்சகத்திற்கும், இலங்கைச் சமசமாஜக் கட்சியின் மனமுவந்த நன்றி உரித்தாகுக.

…LAI WEST
…UNNAKAM
LIBRARY
KD/12

### மொழிபெயர்ப்பாளர்கள்

T. E. புஸ்பராஜன்
K. வேலாயுதன்
R. பானுதேவன்
V. E. மூர்த்தி
K. சிவராமலிங்கம்
V. ஆனந்தசங்கரி
A. S. கனகரத்தினம்

…HY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY
KD/12

# உள்ளடக்கம்

பக்கம்

முகவுரை
தமிழ் பேசும் மக்கள் சார்பில் 1

I. பொலிஸ் தாக்குதல் கண்டனம்

1. பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை 3
2. தோழர் பேனர்ட் சொய்ஸா 5
3. கொழும்பு மாநகரசபையின் தீர்மானம் 7

II. இராணுவத்திற்கு எதிர்ப்பு

1, தோழர் என். எம். பெரேரா 8
2. தோழர் எட்மன்ட் சமரக்கொடி 10
3. தோழர் என். எம். பெரேரா 11
4. தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா 16
5. கண்டனக் கூட்டம் 18
6. அடையாள வேலை நிறுத்தம் 19

III. கூப்பன் அரிசி கொடு!

1. தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா 20
2. தோழர் எட்மன்ட் சமரக்கொடி 25
3. அகில இலங்கை சமசமாஜ வாலிபர் சங்கச் சம்மேளனத்தின் தீர்மானம் 28

IV. அவசரகாலச் சட்டம் அநியாயமானது

1. பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை 29
2. தோழர் லெஸ்லி குணவர்த்தன 31
3. தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா 31

பக்கம்

4. தோழர் டொறிக் டி. சூஸா — 33
5. தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா — 40
6. தோழர் எட்மன்ட் சமரக்கொடி — 41
7. தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா — 42
8. தோழர் என். எம். பெரேரா — 43
9. தோழர் எட்மன்ட் சமரக்கொடி — 44

V. மொழி உரிமை அளி

1. ஐக்கிய மே தினப் பொதுக்கூட்டத் தீர்மானங்கள் — 45
2. தோழர் எட்மன்ட் சமரக்கொடி — 46
3. தோழர் என். எம். பெரேரா — 52
4. தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா — 54

VI. இராணுவ ஆட்சி ஒழிக!

1. தோழர் எட்மன்ட் சமரக்கொடி — 57
2. தோழர் எட்மன்ட் சமரக்கொடி — 60

முடிவுரை — 66

# முகவுரை

தமிழ் பேசும் சிறுபான்மையோரின் உரிமைகள் பற்றிய விடயத்திலுள்ள சொற்பொழிவுகள், தீர்மானங்கள், பத்திரங்கள் ஆகியவற்றின் ஒரு தொகுதியாக இப்பிரசுரம் உள்ளது. 1961 பெப்ரவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையிலுமுள்ள மாதங்களின் குறுகிய காலப்பகுதியை மட்டும் கொண்டுள்ள பொழுதிலும், பின்வரும் விடயங்கள் அதிலுள்ளடங்கி இருக்கின்றன.

1. இலங்கை சமசமாஜக் கட்சியின் ஆறு பாராளுமன்ற அங்கத்தவர்களின் பல சொற்பொழிவுகள்;
2. இலங்கைச் சமசமாஜக் கட்சியின் அரசியற் குழு விடுத்த இரு அறிக்கைகள்;
3. 1961 ஏப்ரல் 2-ந் திகதி அனுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை சமசமாஜ வாலிபர் சங்கங்களின் சம்மேளனத்தின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்;
4. கொழும்பு காலி முக மைதானத்தில் நடைபெற்ற கூட்டுத் தொழிற் சங்கங்களின் கூட்டு மே தின விழாவின் தீர்மானம்;
5. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலிஸ் தாக்குதல் பற்றிய கொழும்பு மாநகரசபையின் தீர்மானம்;

இப்பிரசுரத்தை வெளியிடுவதற்கு எவ்விதமான மன்னிப்பும் கோரத் தேவையில்லை. எனினும், எதற்காக என்பது பற்றி சில வார்த்தைகள் எழுத வேண்டியுள்ளது.

இதிலுள்ள சொற்பொழிவுகளும் பத்திரங்களும் கொண்டுள்ள விடயம் இன்றைய நிலை சம்பந்தமாயுள்ளது இவற்

றைப் பிரசுரிப்பதற்குத் தகுந்த காரணமாகும். சிறுபான்மையோரின் உரிமைகள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாமலும் வாழ்க்கையில் சுதந்திரமாக உபயோகிக்க முடியாமலும் இருக்கும் வரையில், இப்பிரசுரத்தில் உள்ளவை. வாசகர்களுக்கு அக்கறையுள்ளதாக இருக்கும். சிறுபான்மையோரின் உரிமைகளுக்காக எமது கட்சி போராடுவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகவும் அமையும். இவ்வாறு சிறுபான்மையோரின் உரிமைகளுக்காகப் போராடுவதில் உள்ள குறிப்பிடக்கூடிய விசேஷத்துவம் என்னவெனில், தமிழ் பேசும் மக்களின் அரசியற் தலைமை முற்றிலும் இன்னொரு கட்சியிடம் — அதாவது, சமஷ்டிக் கட்சியிடம் — தங்கியிருப்பதாகும். சமஷ்டிக் கட்சிக்கும் இலங்கை சமசமாஜக் கட்சிக்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை.

## பொய்ப்பிரசாரத்திற்கு மறுமொழி

மேற்படி சொற்பொழிவுகளும் பத்திரங்களும் வசதியான முறையில் இவ்வாறு கிடைப்பது தமிழ் பேசும் மக்களிடையே இலங்கை சமசமாஜக் கட்சியின் விரோதிகள் செய்யும் பிரசாரத்துக்குத் தகுந்த விடையாகின்றது. இவ்விரோதிகள் சொல்லும் பொய்களும் பித்தலாட்டங்களும் சிங்கள வகுப்புவாதிகளிடையே இவர்களின் சகபாடிகள் சொல்வதற்கு எந்த வகையிலும் குறைந்தவை அல்ல. 1960 மார்ச், ஜூலை பொதுத் தேர்தல்களின் பொழுது பிரசாரம் செய்யப்பட்ட கட்டிவிடப்பட்ட பொய்களைப் பற்றி மட்டும் குறிப்பிட்டாலே போதும். 1955 — 56 ல் நடைபெற்ற தனிச்சிங்களம் பற்றிய கிளர்ச்சியின் பொழுதும், 1958 ல் நடைபெற்ற இனக் கலவரங்களின் பொழுதும் சமசமாஜக் கட்சி தமது கொள்கையைத் தளர்த்தாமல் உறுதியுடன் நின்ற போதிலும் இவ்வாறு பொய்ப் பிரசாரம் கட்சிக்கு எதிராகச் செய்யப்பட்டது என்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். இந்நிகழ்ச்சிகள் மக்களின் மனதில் நன்கு ஞாபகமாக இருந்த காலத்தில், எமது எதிரிகள் எம்மைத் தாக்கத் துணியவில்லை. இன்றுகூட, இலங்கை சமசமாஜக் கட்சியின் வீரமுள்ள நிலைபற்றி அவர்கள் விறைப்புப்பிடித்த மௌனிக



ளாக விளங்குகின்றனர்; அல்லது மனவிருப்பம் இல்லாமலே எமது நிலைபற்றி மெச்சுகின்றனர். ஆனால் நாளைக்கு மக்கள் ஞாபகத்திலிருந்து மறக்கின்ற பொழுது இலங்கை சமசமாஜக் கட்சியைப் பற்றி பொய்புரட்டுகளைப் பரப்ப, பொய்ப்பிரசாரம் செய்வதைத் தொழிலாகக் கொண்ட எமது விரோதிகள் தயங்கமாட்டார்கள். அவ்வித பொய்களுக்கு சாவுமணி அடிக்க இப்பிரசுரம் உதவவேண்டும்.

## முதலாளித்துவப் பத்திரிகைகள்

எம்மிடையே இருக்கும் மனத்திடமற்றவர்களுக்கும் உற்சாகம் ஊட்டுவதற்குத் தேவையான, உபயோகமான ஒரு சாதனமாக இது அமையும்; இன்று மட்டுமல்ல, எதிர்காலத்திலும் இன்னொரு "எட்டியாந்தோட்டைப் பேச்சு" ஒன்றைப் புனைவதற்கு முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு அவசியம் ஏற்படும் பொழுதும், இது உதவும். தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சிக்கும் ஒடுக்கப்பட்டுள்ள சிறுபான்மையோருக்குமிடையே ஒரு கூர்மையான பிளவை உண்டுபண்ண முதலாளித்துவப் பத்திரிகைகள் ஒழுங்குமுறையாகப் பிரசாரம் செய்கின்றன. இவை பிரிந்திருப்பதில் அவற்றின் நலவுரிமை தங்கியிருக்கிறது. ஏனெனில் இவ்விரு சக்திகளும் ஒன்றாக இணையுமாயின் சிறுபான்மையோர் பிரச்சினை தீர்க்கப்படுவதுடன் முதலாளித்துவ சமூகத்தின் முடிவும் விரைவில் ஏற்படும்; இந்த இரண்டாவதைப் பற்றி அவை அச்சமடைகின்றன. ஆகவேதான், இலங்கை சமசமாஜக் கட்சியை நாடித் தமிழ் பேசும் மக்கள் தயக்கத்துடன் ஓரடி எடுத்து வைக்கின்ற காலத்தில், பத்திரிகைப் பித்தலாட்டக்காரர் முற்கூட்டியே தயாரித்து வைத்திருந்த கட்டுக்கதைகளைப் பிரசுரித்து மக்களிடையே தடுமாற்றத்தை உண்டுபண்ணுகின்றனர். அவ்வகையான "புதினங்களுக்கு" இரையாகும் திடகாத்திரமற்ற உள்ளம் படைத்தோர் இப்பிரசுரத்தை வைத்திருந்து, எமது எதிரிகளால் பல திசைகளிலிருந்தும் செய்யப்படும் பிரசாரக் கிளர்ச்சிக் காலங்களில் கட்டாயமாக வாசித்துக் கொள்வது நன்று. அப்பொழுது அவர்கள் தமக்

குள் ஒரு கேள்வியை எழுப்பிப் பார்க்கவேண்டும். பாதக மான சூழ்நிலைகளில் சிறுபான்மையோரின் உரிமைகளுக்காகப் போராடிய ஒரு கட்சி பத்திரிகை முதலாளிகள் கூறுவது போல் பொறுப்பற்ற முறையில் தனது கொள்கையை மாற் றுமா ?

இங்கேயுள்ள ஆறு சொற்பொழிவாளர்களில் ஒருவர் கூடத் தமிழர் அல்லர் என்பது மேல்வாரியாகப் பார்க்கும் ஒரு வருக்குக்கூட நன்கு தெரியும். பிரதான தலைவர்களினது தாய் மொழியைக் கணித்து அல்லது அவர்களின் மூதாதையர்களைப் பற்றி ஆராய்ந்து, சிக்கலான அரசியற் பிரச்சினைகளுக்கு முடிவுகாண்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நேர் மையாக ஒப்புக் கொள்வாராயின், இங்கு காணப்படும் சொற்பொழிவுகள் ஓர் அவிழ்க்கமுடியாத நொடியாக இருக் கும். அவர்களிடையே உள்ள ஒருவழிப் பாதையினரைப் பொறுத்தவரையில் இந்நொடி கூட இருக்கமாட்டாது. ஏனெனில் இச்சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர்கள் ... ... "சிங்கள" எம். பி. க்களாவர் ! ஆனல், இன்றைய அவ லத்தின் அடிகாணு ஆழத்திலிருந்து மீள்வதற்கு வழிதேடும் அக்கறையான, புத்திக்கூர்மையுடையவர்களைப் பொறுத்தவ ரையில், எதிர்காலம் பற்றி உற்சாகமான நம்பிக்கைகொள் ளவும் உள்ளத்துக்கு உறுதியளிக்கவும் இப்பிரசுரம் ஒரு சாதனமாக அமையும்.

**புரட்சிப் பாதை**

சிறுபான்மையோரின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சி தான் மிகச்சிறந்த கூட்டாளி என்பதற்கு இன்னெருமுறை அத்தாட்சியிருப்பது உற்சாகமூட்டுவதாகும். சந்தேகமற்ற இவ்வுண்மையை இந்தச் சொற்பொழிவுகளும் பத்திரங்களும் மேன்மேலும் நிரூபிக்கின்றன. நிகழ்காலம் நம்பிக்கையற்ற தாய் இருளடைந்திருந்த பொழுதிலும், எதிர்காலம் நம் பிக்கை ஊட்டுவதாய் உள்ளது. ஏனெனில் சிறுபான்மை யோரின் இயல்பான கூட்டாளியிடம் சோஷலிஸ, தொழிற்



சங்க இயக்கத்தினிடமுள்ள வலிமையின் வற்ருத தேக்க மும் உள்ளது. ஜனநாயகத்துக்கான தமிழ் பேசும் மக்களின் போராட்டம் நம்பிக்கையற்ற தனிமையில் தவிக்காது முன் னேற வேண்டுமாயின் மேற்படி பலத்தை தமிழ் பேசும் மக்கள் திரட்டமுடியும்; திரட்டவேண்டும். இப்பலத்தைப் பற்றி அறிவதன் மூலம் உடனடியாக மன ஆறுதல் பெறவும் சோஷலிஸ இயக்கத்தின் பிரமாண்டமான சக்திகளின் தலையீட்டால் இறுதியில் நன்மை அடைய வும் வேண்டின், இந்த மக்கள் இயக்கத்தைத் தமிழ் பேசும் மக்கள் நாடவேண்டியது அவசியமாகும். அந்தத் தீர்க்க மான திருப்பத்தை அவர்கள் நாடினல்தான், இறுதியில் வெற்றியளிக்கும் அக்கூட்டணியை உருவாக்க முடியும். அப் பொழுதுதான் ஒரு நூற்ருண்டு காலமாக உள்ள **சர்வதேசிய கீதத்தி**லுள்ள சொற்கள் இலங்கையில் கருத்துடன் விளங் கும். "அவர்கள் வெறிதாயிருந்தனர்; அவர்கள் எல்லாமாய் இருப்பர்".

காசிப்பிள்ளையார் கோவிலடி,
தெல்லிப்பளை.
*20-10-'61*

**வை. காராளசிங்கம்**

•••○O○•••

# தமிழ் பேசும் மக்கள் சார்பில்

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக இலங்கை சமசமாஜக் கட்சி என்றும் போராடி வந்திருக்கிறது. இன்றும் போராடிக்கொண்டிருக்கின்றது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுக்க சிங்கள வகுப்புவாதிகள் முனைந்த காலங்களில் இலங்கை சமசமாஜக் கட்சி அவர்களை எதிர்த்து அவர்கள் மத்தியில் நின்று போராடியது 1955-ல் சம அந்தஸ்துக் கோரியும், 1956-ல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்தும், 1958-ல் இனக் கலவரங்களை எதிர்த்தும் இலங்கை சமசமாஜக் கட்சி போராடியது நாட்டின் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

______ இலங்கை சமசமாஜக் கட்சி தொடர்ந்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகத் தனது போராட்டத்தை நடாத்தியது. இவ்வகுப்புவாத அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட **நீதிமன்றங்கள் மொழி மசோதாவை** இலங்கை சமசமாஜக் கட்சி தீவிரமாக எதிர்த்தது. தமிழுக்கும் இடமளிக்கப்படவேண்டும் என்ற திருத்தப் பிரேரணைகள் பாராளுமன்றத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி அங்கத்தவர்களால் கொண்டு வரப்பட்டன; அவை தோல்வியடைந்தபின், அவ்வகுப்புவாத மசோதாவை எதிர்த்து கட்சிப் பிரதிநிதிகள் வாக்களித்தனர்.

1961–ம் வருட ஆரம்பத்தில் தமிழ் பேசும் மக்கள் ஏராளமாக வாழும் கொழும்புத் தலைநகரத்தில் இனவெறியின் ஊற்ருக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சி தனது இன வெறிக் கொள்கையை நிலைநாட்ட முயன்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள கொழும்பு மாநகரசபையில் சிங்களத்தில் மட்டும் பரிபாலனம் நடாத்தத் திட்டம் தீட்டினர். இம் முயற்சியை கொழும்பு மாநகரசபையிலுள்ள இலங்கை சமசமாஜக் கட்சிப் பிரதிநிதிகள் தீவிரமாக எதிர்த்தனர். 25–1–61 ல் நடைபெற்ற கொழும்பு மாநகர சபைக் கூட்டத்தில் கொள்ளுப்பிட்டி வட்டார சமசமாஜ அங்கத்தவர் தோழர் டி. எஸ். மல்லவராச்சி சபை விடயங்கள் சிங்களத்திலும் தமிழிலும் நடாத்தப்பட வேண்டும் என்ற திருத்தப் பிரேரணையை கொண்டு வந்தார். திருத்தப் பிரேரணைக்கு சாதகமாக 9 வாக்குகளும் பாதகமாகப் 18 வாக்குகளும் கிடைத்துத் திருத்தப் பிரேரணை தோல்வி அடைந்தது எதிர்த்து வாக்களித்தவர் யூ. என். பி. அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக இக்காலப்பகுதியில் போராடிய கட்சியின் வரலாற்றின் சில பகுதிகளாவன :



# I பொலிஸ் தாக்குதல் கண்டனம்

1. மாசி 20 ல் நடந்த கச்சேரி மறிப்பை முறியடிக்கும் நோக்கமாகப் பொலிசார் உபயோகித்த பலாத்காரத்தை நேர்முகமாகப் பார்த்துவந்து அறிக்கை கொடுக்கும்படி தோழர் பேனர்ட் சொய்ஸாவை கட்சியின் மத்திய குழு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது. அவர் கட்சிக்கு சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாக வைத்து பத்திரிகைகளுக்குக் கட்சி விடுத்த அறிக்கை பின்வருமாறு :

## விசாரணை நடாத்துக !

சத்தியாக்கிரகிகள் மேல் யாழ்ப்பாணப் பொலிஸார் பிரயோகித்த பலாத்காரம் முற்றிலும் தேவையற்றதெனவும் மிருகத்தனமானதெனவும் இலங்கை சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு கருதுகின்றது. பொலிஸாரின் பலாத்காரத்தை இலங்கை சமசமாஜக் கட்சி கண்டிக்கின்றது; இச்செயலுக்கான பொறுப்பு அரசாங்கத்தினது என வற்புறுத்துகின்றது; இச்சந்தர்ப்பத்தில் பொலிஸாரின் நடத்தை பற்றி விசாரித்து விரைவாகப் பாராளுமன்றத்துக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க ஒரு சுதந்திரமான, பாரபட்சமற்ற விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டுமென கட்சி கோருகின்றது.

சத்தியாக்கிரகத்தினல் நாட்டிலும் அரசாங்கத்தினது முன்னிலையிலும் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை பொலிஸ் நடத்தை பற்றியது மாத்திரமோ அல்லது அரசாங்கம் இவ்வியக்கத்தைக் கையாளும் முறைகள் பற்றியதோ அல்ல என்பதை இச்சந்தர்ப்பத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி சுட்டிக் காட்ட விரும்புகிறது. தமது நியாயமான உரிமைகள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பரந்த உணர்வு தமிழர்களிடையே இருப்பதை அங்கீகரிக்க வேண்டும்.

## நாம் கூறிய யோசனை

சத்தியாக்கிரக இயக்கம் பிசுபிசுத்து விடும் என்ற நம் பிக்கையில் வாளாவிருப்பதை விடுத்து, தமிழர்களின் பீதிகளைப் போக்க அரசாங்கம் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இன்றைய நிலைமையில் இது அத்தியாவசியமானது என்பது இலங்கை சமசமாஜக் கட்சியின் கருத்தாகும். வட,கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் நீதிமன்றங்கள் மொழிச் சட்டத்தின் பிரகாரம் கட்டளைகள் பிறப்பிக்கப்படமாட்டாது என அரசாங்கம் உடனடியாக அறிவிக்க வேண்டும். வட,கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களைத் தமிழில் நடாத்துவதற்கு வேண்டிய திருத்தங்களைப் பாராளுமன்றத்தில் விரைவில் கொண்டுவர வாக்குறுதியளிக்க வேண்டும். தமிழ் மொழி (விசேஷ ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கொண்டுவர இருக்கும் சட்டவிதிகளை அரசாங்கம் வாபஸ் பெறுவதுடன் தமிழர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து சட்டவிதிகளை திருத்தி வரைவதாக வாக்குறுதியளிக்க வேண்டும். நியாயமான அளவு தமிழ் உபயோகம் என்ற அரசாங்கத்தின் கொள்கை எல்லைக்குள் இவற்றை நன்ருகச் செய்ய முடியும்.

இவ்விதமான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தால், இன்றிருக்கும் நெருக்கடியைத் தளர்த்த உதவுவதுடன் தமிழர்களின் நியாயமான உரிமைகள் பற்றிய பிரச்சினைகளில் ஒரு நீதியான, உடன்பாடுடைய தீர்ப்புக் காணவும் வழிகோலும் என்பதில் இலங்கை சமசமாஜக் கட்சிக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

இப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால், இலங்கை மக்கள் எல்லோரும் முன்னேற எவ்வித வழியுமில்லை.



2. 28-2-61ல் தோழர் பேனுர்ட் சொய்ஸா பாராளுமன்றத்தில் பேசியதிலிருந்து சில பகுதிகள் :

## யாழ்ப்பாண விஜயம்

### திரு. பேனுர்ட் சொய்ஸா

கௌரவ உப சபாநாயகர் அவர்களே, ஆம், நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்றேன். எமது கட்சியின் தீர்மானப்படி, கடந்த 20-ந் திகதி அங்கு நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி ஆராய்ந்து அறிவதற்காக நான் அவ்விடம் சென்றேன் ... ... ... ...

சமஷ்டிக் கட்சிப் பிரமுகர்கள் அவ்விடம் வாசலில் சத்தியாக்கிரகம் செய்தனர். உண்மையாக, அசைஸ் நீதிமன்ற விசாரணையை ஆரம்பித்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசாங்க அதிபரின் உத்தியோக பூர்வமான பயணத்தை தடைசெய்யும் எண்ணத்துடனேயே அவர்கள் அவ்வாறு இருந்தனர். இது ஆரம்பமாவதற்கு முன் தினமிருந்தே இவ்வாறு நடைபெறப் போகிறதென்ற வதந்தி எல்லா இடமும் பரவியிருந்தது. இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். இதைக் கௌரவம் சம்பந்தப்பட்ட விடயமாகக் கருதி, இந்தப் பயணத்தை உத்தியோக இல்லத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டுமென்று எண்ணுவது தவறு. பிரஸ்தாப அசைஸ் நீதிமன்ற விசாரணையை ஆரம்பித்து வைக்க அன்று காலை அவர் செல்லவேண்டியிருந்தால், வேறு வழியாகச் செல்ல அவருக்கு வசதியாயிருந்தது. உத்தியோக இல்லத்திலிருந்து பொலிஸ் பாதுகாப்போடு செல்வதைவிட அது மேலானதாகும் ... ... ...

## நடந்ததென்ன ?

பொலிஸாரின் அறிக்கையை வாசித்த கௌரவ நிதி மந்திரி பொலிஸார் தகாத வார்த்தைகளை உபயோகிக்க வில்லை என்று அந்தப் பொலிஸ் அதிகாரிகள் கூறியிருப்பதாக அறிவித்தார். ஆனல், அங்கு நின்ற பாரபட்சமற்ற

பார்வையாளர்களின் சாட்சிப்படி, சத்தியாக்கிரகிகளுக்குக் காயம் ஏற்படுத்த வேண்டுமென்ற பலத்த நோக்கமும், விசால வைரமும், கடுங்கோபமும் பொலிஸ் அதிகாரிகளிட மிருந்தன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உபயோகித்த வார்த்தைகள் என்ன? "இவர்களைச் சுத்தியலடிபோட்டு அகற்றுங்கள்"; "இங்கிருக்கும் இந்த அசுத்தமான மிருகம்", என்ற வார்த்தைகளை மனதில் கோபத்தையும் வைராக்கி யத்தையும் வைத்துக்கொண்டிருப்பவர்கள் தான் உபயோ கிப்பர். அந்த விதத்தில்தான் பொலிசார் அங்கு நடந்து கொண்டனர் ... ... ...

ஆனால், துறைமுகத்தில் சாமான்களை இறக்கும் சம யத்தில், அரிசி மூட்டையைத் தூக்கி வீசும் விதத்தில், சாக்குகளில் வரும் சாமான்களை ஓர் இடத்திலிருந்து இன் னோர் இடத்துக்கு வீசும் விதத்தில், அந்த சத்தியாக்கிரக இயக்கத்தில் பங்குபற்றியிருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டிருக் கிறார்கள் என்பதை அங்கு அந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு நின்றவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது ... ... ...

## அட்டூழியங்கள்

ஆனால், அங்கிருந்த உண்மையான நிலைமை என்ன? காயமடைந்தவர்கள் தொகை சுமார் நாற்பது ஆகும். அவர்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைபெறச் சென் றார்கள் ... ... ... கடுமையான காயங்கள் ஏற்பட்ட இருவர் ஆஸ்பத்திரியிலிருந்தே சிகிச்சை பெற்றுவருகிறார்கள். கடுமை யான காயங்கள் ஏற்பட்ட பொழுதிலும் ஆஸ்பத்திரிக்கு செல்லாதவர்கள் தொகை எவ்வளவு என்பது எவருக்கும் தெரியாது ... ... ...

கௌரவ உப சபாநாயகர் அவர்களே, கடுமையான காயமடைந்தவர்களில் இருவரை நான் சந்தித்தேன். ஒரு வருடைய மர்ம ஸ்தானம் (ஆண் குறி) காயமடையும் விதத் தில் காலால் உதைக்கப்பட்டிருக்கிறார் ... ... ... கொடுமை



கள் செய்தது யார்? அவைகள் எவ்வாறு நடைபெற்றன? ஆரம்பமாவதற்குக் காரணமென்ன? ஆகிய விடயங்களை இந்நாடும் கௌரவ இச்சபையும் அறியும்படி செய்ய ஒரு விசாரணைச் சபையை நியமிக்கும்படி வேண்டுகிறேன்.

**3. கொழும்பு மாநகர சபையில் இப்பிரச்சினைபற்றி நிறை வேற்றப்பட்ட தீர்மானம்: (22-2-61)**

"நாட்டில் வாழும் சமூகங்களிடையே உள்ள உறவுநிலை தொடர்ந்து சீர்குன்றுவதை ஆழ்ந்த கவலையுடன் இச்சபை கவனிப்பதுடன் கௌரவ பிரதம மந்திரியிடம் கோருவ தாவது:

(அ) யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் அடித்துக் காயப்படுத்தப்பட்ட பொலிஸ் அட்டூழியங் கள் பற்றிய குற்றச்சாட்டுகள் பற்றி ஒரு பாரபட் சமற்ற விசாரணை நடாத்தவேண்டும்: அத்துடன்;

(ஆ) மொழியையும் அதுபோன்ற மற்றைய பிரச்சினைகளை யும் திருப்திகரமாகத் தீர்த்துவைப்பதற்கான முயற் சியில் ஒத்துழைப்பதற்காக எல்லா அரசியற் கட்சி களையும் குழுக்களையும் சேர்த்துக் கூட்டவேண்டும். ஏனெனில் அவற்றைத் தீர்த்து வைக்காததால் நாட்டின் சக்தி வீணாக விரயம் செய்யப்படுகின் றது; இனப் பகைமையைத் தேவையற்று வளர்க் கின்றது; நாட்டின் முன்னேற்றத்தைத் தடை செய் கின்றது."

பிரேரித்தவர் — சமசமாஜ நகரசபைக் குழு அங்கத்தவர்
**திருமதி. மீனா இரத்தினம்**

அனுமதித்தவர் — இலங்கை சமசமாஜக் கட்சிஅங்கத்தவர்
**திரு. தோழர் சிட்னி வனசிங்க**

## II இராணுவத்துக்கு எதிர்ப்பு

**1. தோழர் என். எம். பெரேரா பாராளுமன்றத்தில் 1-3-61 ல் பேசியதாவது:**

**டாக்டர் என். எம். பெரேரா**

*பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின் கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி இந்நேரம் இவ்விடத்தில் இருப்பார் என எண்ணியிருந்தேன். அவர் இவ்விடம் இல்லாததைப் பற்றி நான் விசனிக்கிறேன். நாட்டில் மிகவும் பாரதூரமான நிலைமை உருவாகியிருக்கிறது. கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி இங்கு பிரசன்னமாயிருந்திருக்கவேண்டும். இப்பிரச்சினையை எழுப்ப இச்சந்தர்ப்பம் ஒன்று மட்டுமே எமக்கு உள்ளது. உண்மையில் என்ன நடந்தது, அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என எமக்குத் தெரியாது. எமக்குத் தந்திகள் கிடைத்துள்ளன. வடக்கிலும் கிழக்கிலுமிருந்து அங்கத்தவர்கள் பலருக்கு இவ்வாறு கிடைத்திருக்கும் என நான் நினைக்கிறேன். அதிக தொந்தரவுகளை உருவாக்கக்கூடிய விதத்தில் சில இடங்களில் படைகள் அமர்த்தப்பட்டுள்ளன. இதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்னவென்று எனக்குத் தெரியாது. மிரட்டலின் மூலம் பிரச்சினைகள் தீரும் என அவர்கள் கருதினால், இந்த அரசாங்கம் – எஸ். எல். எப். பி. அல்லது எம். இ. பி. அரசாங்கம் (இரண்டும் ஏறக்குறைய ஒரே ஆட்களைக் கொண்டது) - ஒரு கசப்பான பாடத்தைப் படித்திருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பிணையிலிருந்து நீங்கள் அறிவுபெறாவிட்டால், காலம் உங்களைக் கடந்து சென்றுவிடும். கடந்தகாலத்தில் ஏற்பட்ட விளைவுகள் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை.*

### சட்டமெங்கே?

*நான் இதைமட்டும் அறிய விரும்புகிறேன்; எச்சட்டத்தின் கீழ் இவர்கள் செயலாற்றுகிறார்கள்? 1959 ம் வருட*



*பொதுசன பாதுகாப்புத் (திருத்தச் சட்டத்தின்) திருத்தங்களின் பிரகாரம் செயலாற்றுகின்றனரா? ஏனெனில் இந் நாட்டின் சில பகுதிகள் தடுக்கப்பட்டுள்ள பகுதிகளாக இருப்பதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன.*

**கௌரவ மைத்திரிபால சேனனாயக்கா**

*அப்படிப் பத்திரிகைகள் கூறுகின்றன.*

**டாக்டர் என். எம். பெரேரா**

*எமக்கு அறிய உரிமையுண்டு. இது ஒரு பாரதூரமான விடையமாகும். படைகளை உபயோகிப்பதால், பொது இடங்களைக் காவல் புரிகிறீர்களென்றால், ஒழுங்கை நிலைநாட்டப் படைவீரர்களைப் பயன்படுத்துகிறதானால், எச்சட்டத்தின் கீழ் செயலாற்றுகிறீர்கள்? இராணுவப்படை சட்டத்தின் பிரகாரம் இருக்க முடியாது. ஏனெனில் இராணுவச் சட்டத்தின் பிரகாரம் சட்டவிரோதமான குடியேற்றத்தைத் தடுக்கக்கூட இராணுவத்தை உபயோகிக்க முடியாது. எனவே, எச்சட்டத்தின் பிரகாரம் செயலாற்றுகின்றீர்கள்? 1959-ம் வருட பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்படி, சபைகூடிக் கொண்டிருந்தால் அக்கட்டளைகளை உடனடியாகச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதுடன் சபையிலும் உடனடியாகச் சமர்ப்பிக்கவேண்டும். இவ்வாறு அச்சட்டம் கூறுகின்றது. தற்செயலாக ஒரு சம்பவம் நிகழ்ந்தால் எந்த அடிப்படையில் செயலாற்றுவீர்கள்?*

**திரு. டப்ளியு தகனாயக்க:**

*பைத்தியக்காரச் சட்டம்!*

**டாக்டர் என். எம். பெரேரா**

*மனிதர்களை கடவுள் அழிப்பதற்கு முன்னர் அவர்களைச் விசரர்களாக்குவதாகக் கூறுவர். ஆனால் இந்த அரசாங்கத்துக்கு இன்னும் பைத்தியம் ஏற்படவில்லை என நம்புவோமாக. இவ்வேறுபாடுகளை சமாதானமாகத் தீர்ப்பதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை. தீர்த்துவைக்க*

முடியாத விதத்தில் பிரச்சினைகள் மிகவும் பெரிதாகவும் வேறுபாடுகள் மிகவும் பரந்தவையாகவும் இருக்கவில்லை. ஒரு சில தவறான செய்கைகளின் விளைவாக இந்நிலை உருவாகியுள்ளது. கௌரவத்தைக் கட்டிக்கொண்டு நிற்பதில் பயனில்லை. என்னுடைய முழு மனதையும் கொண்டு நான் விண்ணப்பிக்க விரும்புகின்றேன்; விஷயங்களை தம்பாட்டில் சென்றுகொண்டிருக்க அனுமதியாதீர்கள்; தயவுசெய்து இது பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தி இப்பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள்.

**2. தோழர் எட்மன்ட் சமரக்கொடி பாராளுமன்றத்தில் 1-3-61 ல் பேசியதாவது :**

**திரு. எட்மன்ட் சமரக்கொடி**

நான் இரு நிமிடங்களுக்கு மேல் பேசவில்லை ஏனெனில், நான் கூறும் விடயம் பற்றி கௌரவ அமைச்சர் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

## சட்டவிரோதமானது:

வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவ, படை வீரர் உபயோகம் பற்றி எட்டியாந்தோட்டை கௌரவ அங்கத்தவர் "எச்சட்டத்தின் கீழ் அரசாங்கம் செயலாற்றுகின்றது?" என, வினவினார். இந்நிலையில் அரசாங்கம் சட்டவிரோதமாக நடக்கின்றது என்பது எனது கருத்தாகும். ஏனெனில் இவ்விடயத்தில் சட்டம் தெளிவாக உள்ளது. அரசாங்கம் செயலாற்றுவதற்கு ஒன்றில் அவசரகால நிலையிருக்கவேண்டும். அல்லது அரசாங்கம் சட்டப்படி செயலாற்ற வேண்டும். சட்டம் தெளிவாக உள்ளது.

சாதாரணமாக, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலை நாட்டும் பொறுப்பு பொலிஸாரைச் சார்ந்ததாகும். கிறிமினல் சட்டத் தொகுப்பின் எட்டாவது பிரிவில் சட்டவிரோதமான சனத்திரள்களைக் கையாளுவதற்கு சில ஏற்பாடுகள் உள்ளன. ஒரு நிலைமையைப் பொலிஸாரால் சமாளிக்க முடியாவிடின், பொலிஸார் இராணுவத்தை அழைப்பதற்கு அதிகாரமுண்டு.



101 ம் பிரிவை நான் குறிப்பிடுவதைப் பொறுமையாகக் கேட்குமாறு வேண்டிக்கொள்கிறேன். அப்பிரிவு கூறுவதாவது:-

"இராணுவப்படை உபயோகம் :

"ஒரு குறிப்பிட்ட சனத்திரளை வேறு வழிகளில் கலைக்க முடியாது. அதேநேரத்தில் பொதுசன பாதுகாப்பை முன்னிட்டு கலைக்கவேண்டியிருந்தால், அம்மாகாண அரசாங்க அதிபர் அல்லது சமுகமாயுள்ள அப்பகுதி நீதவான் அல்லது பிரதம பொலிஸ் அதிகாரி அவர்களை இராணுவப் படைகொண்டு கலையச் செய்விக்கலாம்."

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது. பிரச்சினை அதுவல்ல. சிவில் பரிபாலனத்தில் அவர்கள் தலையிட்டுள்ளார்கள்; தலையிடுகிறார்கள். இன்றைய "ஒப்ஸ்சேவர்" பத்திரிகை கூறுவதாவது: "யாழ்ப்பாணத்தில் ஏற்கெனவே கடற்படை வீரர்களின் பகுதிகள் காணப்படுகின்றன. கச்சேரிக்குச் செல்லும் எல்லாப் பிரதான பாதைகளிலும் இன்று காலையில் அவர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். கச்சேரிக்குச் செல்லும் வாசல்களில் தொண்டர்கள் மறியல் செய்வதைத் தடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன."

இக்கட்டளைகளைக் கொடுத்தவர் யார்? அரசாங்கத்தின் கட்டளைப் பிரகாரம் மட்டும்தான் அவர்கள் செயலாற்றமுடியும். பொலிஸாரின் அழைப்பின் பேரில் அல்லது புத்திமதியின்படி மட்டும் அவர்கள் செயலாற்ற வேண்டும். நிலைமை அவ்வாறு இருக்க, யாருடைய கட்டளைகளின்படி அங்கு இராணுவம் அனுப்பப்பட்டது எனவும் யாருடைய கட்டளைகளின்படி இராணுவம் சிவில் பரிபாலனத்தில் இப்பொழுது தலையிடுகிறார்களென்பதையும் நாம் அறிய விரும்புகிறோம்.

**3. யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தை அனுப்பியதை ஆட்சேபித்து டாக்டர் என். எம். பெரேரா பேசியதாவது :**

**டாக்டர் என். எம். பெரேரா**

பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின் கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி இங்கு பிரசன்னமாயிருந்தாலென நான் விரும்புகிறேன்.

**கௌரவ சமரவீர**

எழக்கூடிய ஏதாவது பிரச்சினைபற்றி என்னைக் கவனிக்குமாறு கூறப்பட்டுள்ளது.

## 23-ம் பிரிவு இடமளிக்கவில்லை

**டாக்டர் என். எம். பெரேரா**

நேற்று நான் பேசிய பொழுதும் அவர் இல்லாததைப்பற்றியும் நான் வருத்தப்படுகிறேன். அபிவிருத்தியாகும் நிலைமைபற்றி எனது ஆழ்ந்தகவலையை நேற்று நான் தெரிவித்ததைப்பற்றி கௌரவ அங்கத்தவர்கள் அறிவர். இராணுவத்தை உபயோகிப்பதுபற்றி நான நேற்று வினாவினேன். அச்சந்தர்ப்பத்தில் இராணுவச் சட்டத்தின் 23-ம் பிரிவின் பிரகாரம் அவர்கள் செயலாற்றுவதாக கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி கூறினார், அவர்கள் கருதும் நடவடிக்கைக்கு இராணுவச் சட்டத்தின் 23-ம் பிரிவு இடமளிக்கவில்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ஒரு பொது வேலைநிறுத்தத்தின் பொழுதோ அல்லது அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலோ அத்தியாவசிய சேவைகளை நடாத்துவதற்கு மாத்திரமே அப்பிரிவு உள்ளது. இன்று நடைபெறுவது வேறுவிதமாக உள்ளது. அப்படிப்பட்ட சட்ட விரோதமான நடவடிக்கைகளை அரசாங்கம் செய்வதை நான் விரும்பவில்லை. கடற்படையைப் பொறுத்தவரையில் அதன் நிலை வித்தியாசமானது என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். கடற்படைச் சட்டத்தின் பிரிவுகள் பரந்தவையாகும். அதன்படி மகாதேசாதிபதியின் கட்டளையின் பெயரில் கடற்பாதுகாப்புச் சம்பந்தமற்ற மற்றைய பணிகளுக்கும் கடற்படையை உபயோகிக்கலாம்.

நேற்று நான் தெரிவித்த கவலையை இன்று நான் கேள்விப்பட்ட செய்திகள் ருசுப்படுத்தியுள்ளன. அவை



எவ்வளவு தூரம் உண்மையென எனக்குத் தெரியாது. அதனாற்தான் அவற்றை ஏற்கவோ, மறுக்கவோ பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சின் கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி இங்கிருப்பதை நான் விரும்புகிறேன். வடபகுதியிலுள்ள நிலைமைபற்றி அவர் அடிக்கடி தொடர்பு கொள்ளுகிறார் என நான் கருதுகிறேன்.

## இராணுவத்தின் அட்டகாசங்கள் !

இச்சபையின் ஒரு கௌரவ அங்கத்தவர் இப்பொழுதுதான் தொலைபேசி மூலம் கூறியுள்ளார். இது எவ்வளவு தூரம் உண்மையோ அல்லவோ எனக்குத் தெரியாது. இதை நான் பயனுடையது எனக் கூறுகிறேன். கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி இத்தகவலை ஆராய்ந்தறியவேண்டும். யாழ்ப்பாணம் பிரவேசிக்கமுடியாத பிரதேசம் போலாகிவிட்டது. உட்பிரவேசிக்க முடியாத பிரதேசத்திலும் அதற்கு வெளியிலும் இருவகையான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. உட்பிரவேசிக்க முடியாத அல்லது தடுக்கப்பட்ட பிரதேசம் எந்த அடிப்படையில் அல்லது எந்தச் சட்டத்தின்கீழ் அவ்வாறு நடைபெறுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், 1959-ம் வருட பொதுசன பாதுகாப்பு (திருத்த) சட்டத்தின்கீழ் மட்டும்தான் அவ்வாறு செய்யமுடியும். அதைப் பிரகடனப்படுத்தாது, எந்த அடிப்படையில் இது நடைபெறுகிறது எனத் தெரியவில்லை.

எப்படியெனினும், நிலைமை பின்வருமாறு உள்ளது : உண்மையில் மக்கள் சிறைப்படுத்தப் பட்டுள்ளனர் — அவ்வாறுதான் அறிக்கை கூறுகின்றது — அவ்விடத்தை விட்டு அவர்கள் வெளியே செல்லமுடியாது, தபால்களை விநியோகிக்கும் தபால் ஊழியர் ஒருவர் துப்பாக்கி முனையால் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்துள்ளார்; பாடசாலை செல்லும் மாணவர்கள் வழிமறிக்கப்பட்டனர்; சத்தியாக்கிரகிகள் அருந்துவதற்கு நீர் கொடுப்பது மறுக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கும் உணவு அளிக்க முடியாது; சத்தியாக்கிரகிகளுக்கு உணவு அளிக்க முற்பட்டவர்கள் தாக்கப்பட்டுள்ளனர், என்பது போலப் பலவாகும்.

ஆஸ்பத்திரிகள் சீர்குலைந்துள்ளன; ஆஸ்பத்திரிக்கு வைத்தியர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை; தலையீடு காரணமாக வைத்தியர்கள், சுகாதார சேவையாளர்கள், தாதிமார் ஆகியோர் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியவில்லை; இதன் விளைவாக வேலை பூராவும் சீர்குலைந்துள்ளது எனவும் நான் அறிகிறேன். அவ்விடயம் பற்றி எனக்கு ஒரு தந்தியும் கிடைத்துள்ளது. இதன் விளைவாக சில சத்திர சிகிச்சைகள் ஒத்திப்போடப்பட்டுள்ளன.

தடுக்கப்பட்டுள்ள பிரதேசத்துக்கு அப்பால் பள்ளிப் பிள்ளைகளை வழிமறித்துள்ளதாகவும் அறிகிறேன். நடந்து செல்பவர்கள், பஸ்கள், கார்கள் எல்லாம் கடற்படையினரால் பரிசோதிக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்க்கை ஸ்தம்பித்துவிட்டது என்பதே எனது விளக்கமாகும். இருபாடசாலைகள் மூடப்பட்டு விடுதிச்சாலை மாணவர்கள் 24 மணித்தியாலத்தில் வெளியேறும்படி கூறப்பட்டுள்ளனர். எந்தக் கட்டளை அல்லது எந்தச்சட்டத்தைக் கொண்டு அவ்வாறு சுவீகாரங்கள் செய்யப்பட்டுள்ளன என எனக்குத் தெரியவில்லை. பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளாவன: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் மகளிர் கல்லூரி. 24 மணி நேர முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ அங்கத்தவர் ஒருவர்:**

ஒரு மணி அவகாசம்.

**டாக்டர் என். எம். பெரேரா**

ஒரு மணி அவகாசம் மட்டும்தான் கொடுக்கப்பட்டது. இராணுவ கடற்படை வீரர் அவற்றை எடுத்திருக்கவேண்டுமென நினைக்கிறேன்.

இக்கூற்றுக்கள் எல்லாம் சரியானவை என்று நான் உத்தரவாதம் அளிக்கவில்லை. ஆனால் எமக்குக் கிடைத்திருக்கும் செய்திகளிலிருந்து சீர்குலைவு ஏற்பட்டிருக்கின்றது என்பது



தெரிகின்றது. என்ன நடைபெறுகிறது என்பதைப்பற்றி கௌரவ பாரா. காரி. இச்சபைக்கு நியாயமான ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

எமக்கு இதில் மிகவும் அக்கறையுண்டு. இந்நிலைமை சீரழிய நாம் அனுமதிக்கக்கூடாது. எல்லோரதும் நன்மையை முன்னிட்டு ஒரு தீர்ப்பு விரைவில் ஏற்படவேண்டும். இன்று காலை நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் தமது ஆழ்ந்த ஆவலைத் தெரிவித்து இப்பிரச்சனையை விரைவில் தீர்க்க வேண்டும் என விரும்பினர்.

நிலைமையின் சீர்கேடான அம்சம் பின்வருமாறு: கீழ்த்தர உத்தியோகத்தரால் செய்யப்படும் அட்டூழியங்களைப் பற்றி முறையிட ஒரு மேலதிகாரி ஒருவரோ, ஒரு அதிகாரியோ இல்லை. இது விரும்பத்தக்கதல்ல. இந்நிலையில் அவ்விடத்தில் அதிகாரமுடைய ஒருவர் இருக்க வேண்டும். ஆனால் அநீதி விளைவிக்கப்பட்டவர்கள் சென்று முறையிட பொலிஸிலோ, இராணுவத்திலோ, கடற்படையிலோ, ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் கூறியது போல, இது விரும்பத்தக்கதல்ல. எனவே நிலைமையை கவனமாகக் கையாள வேண்டும்.

நான் சொல்லக்கூடியது இதுதான். இவ்வனுபவத்தின் ஊடாக ஒரு முறை சென்றுவிட்டோம்; இன்னொரு முறை திரும்பவும் நடைபெறுவதை நாம் விரும்பவில்லை. நாட்டின் மற்றைய பகுதிகளில் விளைவுகளை உருவாக்கக்கூடிய சம்பவங்கள் ஒன்றும் நடைபெறாது தவிர்க்க அரசாங்கம் எல்லா வழிகளிலும் முயன்று, இப்பிரச்சினையில் ஓர் உடன்பாடு ஏற்பட பேச்சுவார்த்தைகளை தொடக்கி வைக்கும் என நம்புகிறேன். சிறுபான்மையோரை நாம் நடாத்தியுள்ள விதத்தைப்பற்றி வெளிநாட்டில் தெரிந்தால் அது நம்நாட்டுக்கு நல்ல விளம்பரமாகமாட்டாது. மற்றைய நாடுகளைப்பற்றி, கொங்கோவைப்பற்றி, நாம் வைதுள்ளோம். அப்படிப்பட்ட சம்பவங்கள் இந்நாட்டின் வரலாற்றைக் கறைப்படுத்தாது கவனிக்கவேண்டியது எமது கடமை

யாகும். நானறிந்த பல கூற்றுகளின் உண்மைபொய் தெரியாததால் நான் மேலும் பேசவில்லை. ஆனல் இவ்விடயங்களால் விரும்பத்தகாத அபாயகரமான சூழ்நிலைகள் உருவாகலாம். நியாயமான முறையில் இவற்றை வராது தடுக்க வேண்டும். கௌரவ பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி இவ்விடத்தில் இல்லை. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள நிலைபற்றி நாளை ஓர் அறிக்கை வெளியிடுவாரென நினைக்கிறேன். பொலனறுவை, வவுனியா, மலைநாட்டுப்பகுதிகள் போன்ற நாட்டின் ஏனைய பாகங்களிலும் இராணுவம் வைக்கப்பட்டுள்ளது என்பதும் எனக்குத் தெரியும். இவ்வளவும் தான் நான் கூற விரும்புகிறேன். கௌரவ உள்ளூராட்சி அமைச்சு எங்களுக்கு விளக்கமளிக்க கூடிய நிலையில் இருக்கிருரோ என்று தெரியவில்லை. எனினும் நாளை கௌரவ பா. கா. இந்நிலைமை பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## மலைநாட்டுக்கு இராணுவம் ஏன் ?

**4. 2-3-61 ல் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஜனப் பிரதிநிதிகள் சபையில் பேசியதிலிருந்து சில பகுதிகள் :**

இன்று பொலனறுவைக்கும் வவுனியாவுக்கும் மலைநாட்டுப் பகுதிகளுக்கும் இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது. எதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றது? எந்தக் குறையை நீக்குவதற்காக? என்பன போன்றவற்றை நாம் அறியத்தர வேண்டும். பொதுவாக இந்த நாட்டில் இதுவரையிருந்த அரசாங்கங்கள் மலைநாட்டுப் பகுதிகளுக்கு இராணுவப் படையை அனுப்பிய நோக்கம் தோட்டப் பகுதிகளிலுள்ள தொழிலாளர்களை பயமுறுத்துவதற்காகுமே தவிர, வேறென்றும் செய்வதற்கல்ல. அந்தத் தொழிலாளர் இயக்கத்தில் பணியாற்றுபவன் என்ற முறையில், அது சம்பந்தமான தினசரி விடயங்களை நான் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இதை நான் இவ்விடத்தில் கூருதுவிட்டால், என்னுல் நிறைவேறவேண்டிய ஒரு முக்கிய கடமை நிறைவேற்றப்படவில்லை என எண்ண இடமிருக்கிறது.



இராணுவத்தின் அட்டூழியங்களை நேரில் பார்க்க
யாழ்ப்பாணம் வந்த எட்மன்ட் சமரக்கொடியும்
மெறில் பேர்ணுந்தும் பலாலி விமான நிலையத்தில்.



இந்தச் சபையிலுள்ள இரு அங்கத்தவர்கள் — ஐக்கிய தேசியக் கட்சியினர் — யாழ்ப்பாணம் கச்சேரிக்குள் செல்ல முயன்றனர். ஆனல், கச்சேரிக்குள் அவர்கள் செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறிருக்கையில், எமக்குக் கிடைக்கும் அறிக்கை சரியா, பிழையா என்று எவ்வாறு அறிய முடியும்? ... ... ...

## 23-ம் பிரிவு

கௌரவ சபாநாயகர் அவர்களே! இந்தப் பிரிவின் கருத்து இதுதான். இங்நாட்டில் நடைபெறும் எந்த ஓர் இயக்கத்தின் காரணமாக அல்லது நடைபெறப் போவதாக மிரட்டும் ஓர் இயக்கத்தின் காரணமாக அத்தியாவசியப் பொருட்களைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்வது தடைப்பட்டால், பொதுமக்களுக்கு அப்பொருள்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக நமது நாட்டின் இராணுவத்தை உபயோகிக்க மகாதேசாதிபதிக்கு இப்பிரிவின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

துறைமுகத் தொழிலாளர் ஒரு மாபெரும் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தால், அந்த துறைமுகத்திலுள்ள பொருள்கள் நாட்டுக்கு அத்தியாவசியமானவை எனக் கூறப்பட்டால், அந்தத் துறைமுகத்தில் அரிசி இறக்குமதி செய்யப்படாதிருந்தால், இங்நாட்டிலுள்ளவர்களுக்கு அதனல் உணவு கிடைக்கவில்லையெனக் கருதப்பட்டால், துறைமுகத் தொழிலாளர்களாக இராணுவத்தினரை உபயோகிக்க இச்சட்டம் இடமளிக்கின்றது. அதை விடுத்து, 'துப்பாக்கிகளை மாட்டிக் கொண்டு, சந்திக்கு சந்தி நின்று கொண்டு மனிதர்களைத் துப்பாக்கி முனையால் குத்தி குத்தி "இங்கே போ பிசாசு" எனக் கூறுவதற்கு இச்சட்டத்தில் யாருக்கும் இடமளிக்கப்படவில்லை.

சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்காக இராணுவத்தை உபயோகிக்கும் அதிகாரம் இந்த 23-ம் பிரிவின்படி யாருக்கும் அளிக்கப்படவில்லை.

பொலனறுவைக்கும், வவுனியாவுக்கும் மலைநாட்டுக்கும் இராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அனுப்பப்பட்டிருக்கிறதென்றால் அவ்வாறு அனுப்பப்பட்டது எதற்காக? இரண்டாவதாக, இன்று யாழ்ப்பாண நிலைமை என்ன? எந்தப் பகுதிக்காவது இராணுவப்படை அல்லது கடற்படை அனுப்பப்பட்டால் அங்கு அபாயமான, தவறான செய்கைகள் ஏற்படும் என்பது எமது அனுபவத்தில் தெரிந்த விடயமானதால் அதுபற்றி நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன், இன்றுள்ள உண்மையான நிலைமைபற்றி எமக்குக் கூறப்படவேண்டும்......

## 5. கண்டனக் கூட்டம்

6–3–61ல் இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் முயற்சியினால் இராணுவத்தை வாபஸ்வாங்கும்படி கோரி சகல கட்சிகளின் (கொம்யூனிஸ்ற் கட்சி தவிர) பகிரங்கக் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. திரு. ஹண்டி பேரின்பநாயகம் தலைமை தாங்கிய இக்கூட்டத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி சார்பில் தோழர்கள் வை. காராளசிங்கம், பொ. நாகலிங்கம் ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணப் பிரதேசக்கிளை இராணுவத்தை உடனடியாக வாபஸாக்க வேண்டுமென்று கோரி ஓர் ஊர்வலத்தை நடாத்தியது.

சமஷ்டிக் கட்சி சார்பில் டாக்டர் ஈ. எம். வீ. நாகநாதனும் திரு. எம். பாலசுந்தரமும் கூட்டத்தில் பேசினார்கள். கூட்டத்தில் பங்கு பற்றிய ஏனைய பேச்சாளர்கள், திரு. ரீ. எஸ். துரைராசா, யாழ்ப்பாண மேயர், திரு. எம். சிவசிதம்பரம், திரு. அல்ப்றெட் துரையப்பா, ஹாஜி. வீ. எம். எம். அபூசாலி ஆகியவர்.



## 6. அடையாள வேலை நிறுத்தம்

9-3-61ல் தபால் ஊழியரை கடற்படை வீரர் தாக்கியதை ஆட்சேபித்தும், தபால் தந்தி ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் தெரிவித்தும், இராணுவத்தை உடனடியாக வாபஸாக்க வேண்டுமெனவும் கோரி இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் முயற்சியினால் ஒரு நாள் அடையாளப் பொது வேலை நிறுத்தம் ஒன்று 9-3-61ல் நடைபெற்றது. அன்று பிற்பகல் தொழிற் சங்கங்கள் அனைத்தும் மேற்படி கோரிக்கைகளை வற்புறுத்தி ஓர் ஊர்வலத்தையும் பகிரங்கக் கூட்டத்தையும் கூடாத்தினர்.

•••○○○•••

## III கூப்பன் அரிசி கொடு!

1. 14-3-61 ல் **ஜனப்பிரதிநிதிகள் சபையில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசியதிலிருந்து சில பகுதிகள் :**

**டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா**

... ... ... மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உணர்ச்சியின் காரணமாய் நடைபெற்று வரும் ஓர் இயக்கத்தை நேரடியாக அல்லது முன்னறிவித்தலின் பின் நடத்தும் இம்மாதிரியான கழுத்தறுத்தல், மண்டை உடைத்தல் அல்லது கொலைசெய்தல் போன்றவைகளினால் அடக்கி ஒடுக்க முடியுமென்று நான் கருதவில்லை என்பதை சத்தியாக்கிரகம்பற்றி விவாதிக்கப்படும் இத்தருணத்தில் கூறுகின்றேன் ... ...

### அரசாங்கமே பொறுப்பாளி!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் பொதுமக்கள், சபை முதல்வர் விளக்கியது போன்ற இயக்கத்தில் ஈடுபட்டுள்ளார்களானால், மூன்று வார காலமாக நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவ்வியக்கம் வளர்ச்சியுற்றதென்றால், விரிவடைந்ததென்றால், மேலும் மேலும் மக்கள் அவ்வியக்கத்தில் சேர்ந்தார்களென்றால், சேர்கிறார்களென்றால், இவைகளிலிருந்து நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனில், அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் மனதில் இப்பொழுது வேறுவிதத்தில் போக்கமுடியாத பீதியும் வருத்தமும் ஏற்பட்டிருக்கிறது என்பதாகும். அப்பீதியைப் போக்குவதற்கு, அவ்வருத்தத்தை அகற்றுவதற்கு தோன்றியுள்ள பிரச்சனைகளைச் சீரடையச் செய்வதற்கு, தீர்த்து வைப்பதற்கு, அரசாங்கம் வழிவகைகளைக் காணவேண்டும். அவ்வாறு கையாளத் தவறின், நாளைய தினத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து



அவ்வியக்கத்தை அடக்கி அமரச் செய்தாலுங்கூட, அதற்கடுத்ததினம் புதுப்பரம்பரையினர் மூலம் அதைவிட விஷம் கலந்த மோசமான விதத்தில் அவ்வியக்கம் தலைத்தெழுவதற்கு இடமுண்டு என்பதை சரித்திர அடிப்படையில் தெரிந்திருப்பதாலேயே இதுபற்றி விவரமாய்ப் பேசினேன் ... ...

### மண்டை உடைத்தல்

வடக்கிலும் கிழக்கிலும் வசிக்கும் மக்கள் எவ்வித ஆயுதமும் தாங்காது தத்தம் குறைகளை எடுத்துக் காட்டும் விதத்தில், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராய் எழுச்சியடைந்து எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்களென்பது நன்று விளங்குகின்றது. இது சம்பந்தமாய் நாம் என்ன செய்கிறோம்? ... ... முதல் நாள் இரண்டு, மூன்று மண்டைகளைப் பொலிஸ் உடைத்தது — நியாயமாகவா அல்லது அநியாயமாகவா என்ற பிரச்சினையல்லத் தீர்க்கவேண்டியது. உடைக்கும் மண்டைகளுக்குப் பதிலாக ஆயிரமாயிரம் மண்டைகளாக மக்கள் போராட்டத்துக்கு ஓடி வந்தார்கள். அதனால், எவ்வித பயனும் கிடைக்கவில்லையென்பது இப்பொழுது விளங்குகிறது தானே!

### அரிசி வழங்க மறுப்பு

அவ்வாறு மண்டை உடைப்பதை நிறுத்திவிட்டு இப்பொழுது சாராயம் போன்றவை விநியோகிக்கத் தயார் என்கிறார்கள். ஆனால், அரிசி விநியோகிக்கத் தயாரில்லை என்கிறார்கள்.

... ... ... நான் தொழிற் சங்க இயக்கத்தில் நீண்ட காலம் சேவை செய்தவன். ஏதாவதொரு தொழிற் சங்கம் வேலை நிறுத்தம் செய்தால், வேலை நிறுத்தத்தின் அடிப்படைக் காரணம் நியாயமானதென ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, அது ஒரு பொருத்தமற்ற தகுதியற்ற போராட்டமாகக் கருதினாலும் கூட, அச்சங்கத்தினர் தம்முடைய வேலை ஸ்தலத்தைச் சுற்றி "மறியல்" செய்தால் அதை முறியடிக்க

நாம் இடமளிக்கத் தயாராகவில்லை. ஆனல், யாழ்ப்பாண மக்களிடம் கூறப்படுவது என்ன? தொகையான சத்தியாக் கிரகிகள் கச்சேரியை வட்டமிட்டுக் கொண்டிருக்கிருர்கள். அரசாங்கம் யாழ்ப்பாண மக்களைப் பார்த்துக் கூறுகிறது: 'உங்களுடைய பங்கீட்டரிசி தேவையென்ருல் சத்தியாக்கிரக இயக்கத்தை உடையுங்கள்'. தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்டு அதன்மூலம் மேலிடமடைந்த அமைச்சர் இலங்கரத்தின போன்ற அமைச்சரொருவர் இக்கௌரவச் சபையில் எழுந்து இது மாதிரி வார்த்தைகளை உபயோகிப்பது பற்றி எனது மனதில் மற்றைய நாட்களைவிட ஆவேசம் ஏற்பட்டது. அமைச்சர் என்ன கூறுகிருர்? சத்தியாக்கிரக இயக்கத்தவரின் "மறியல்" வரிசையை உடைத்துக் கொண்டு வராவிடின் நாங்கள் அரிசி சொடோம்.

**கௌரவ இலங்கரத்தின**

நான் அப்படிக் கூறவில்லை.

**டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா**

அமைச்சரவர்களின் பேச்சிலிருந்து "தொண்டைக்குத் தெரியாமல் மருந்துண்ண வேண்டாம்" என்ற கிராமியப் பழமொழி நினைவுக்கு வருகின்றது. அதுமட்டுமல்ல. இம் முறையில் வராவிட்டால் கொடுக்கமாட்டோம் எனப் பய முறுத்தலும் செய்தார்.

## பிரதமரின் அறிக்கை:

கௌரவ சபாநாயகர் அவர்களே! சத்தியாக்கிரகிகள் தங்கள் இயக்கத்தை நிறுத்தும்வரை இப்பிரச்சினைபற்றி பேச்சுவார்த்தை நடாத்த அரசாங்கம் தயாரில்லையெனக் கூறும் அறிக்கையொன்றை கௌரவ பிரதமர் இந்நாட்டை விட்டு வெளியே செல்லுமுன் வெளியிட்டார். அது குறுகிய எண்ணத்தில் வெளியிட்ட அறிக்கை என்பதை நான் கூற வேண்டும் ... ...



(இதேபோலக் கூறிய பல அரசாங்கங்கள் பின்பு பேச்சு வார்த்தைகள் நடாத்த வேண்டிய நிலைக்கு வந்துள்ளன என் பதை உதாரணங்கள் மூலம் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா எடுத்துக் காட்டினர். இக்கட்டத்தில், "துரோகி" எனக் கூச்சலிட்டு அரசாங்கக் கட்சியினர் அவருடைய பேச்சில் இடையீடு செய்தனர் — ஆசிரியர்).

**கௌரவ அங்கத்தவர் ஒருவர்**

வெள்ளவத்தையில் எத்தனை தமிழ் வாக்குகள் உள்ளன?

**டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா**

வெள்ளவத்தையில் எத்தனை தமிழ் வாக்குகள் இருக்கிற தென்பதை அந்தப் பிரதிநிதி அறிவார். மற்ற விடயம் அவருக்குத் தெரியாது. அதாவது என்னுடைய தொகுதி வெள்ளவத்தை அல்ல என்பது ... ...

## தமிழுக்கு சம அந்தஸ்து

அந்த தமிழ் பொது மக்களின் கோரிக்கைகள் வெட்ட வெளிச்சமாய் விளங்குகின்றன. சிங்கள மொழி அரசகரும மொழியாக சட்டமாக்கப்பட்டுவிட்டது. அதை அவர்கள் எதிர்க்கவில்லை. **அவர்கள் கேட்டுக் கொள்வது அவர்களுடைய மொழிக்கும் அரசாங்கத்தில் சட்டரீதியான அதே இடத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாகும்.** அதைத் தவிர, நாட்டைத் துண்டு போடுவது அல்லது பிரிப்பது போன்ற எண்ணமோ கோரிக்கையோ அவர்களிடம் கிடையாது. அக்கோரிக்கைகளுக்கு செவிமடுத்து, குறிப்பிட்ட காலத்திற்குள் அவைகளை நிறைவேற்றுவிடின் எங்களாலேயே அம் மக்கள் அடுத்த கோரிக்கைக்குச் செல்வார்கள்.

**கௌரவ சபாநாயகர்**

கௌரவ அங்கத்தவர் தனது பேச்சை இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா

நல்லது. கௌரவ சபாநாயகர் அவர்களே, 'சுதந்திரன்' பத்திரிகையில் இப்படியொன்று பிரசுரமாகியிருந்தது; 'சிங்கலே' பத்திரிகையில் இன்னொன்று பிரசுரமாகியிருந்தது; கம்பகா கௌரவப் பிரதிநிதி (திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா) ஏதோ ஒன்று கூறினர்; வெலிமட கௌரவ அங்கத்தவர் (திரு. கே. எம். பி. இராஜரத்தின) இன்னொன்று கூறியிருக்கிறார், என்று காரணங்களை ஒன்றின் மேலொன்ருய் அடுக்கி, அது நாட்டின் அபிப்பிராயமென்று நிரூபிப்பது தவறு. எவ்வித நிலைமையின் கீழும் வெவ்வேறு தீவிரவாத அறிக்கைகள் விடுவோர் இருக்கின்றனர். இருப்பினும் சிந்தனையோடு கடமையாற்றும் ஓர் அரசாங்கம் கடமையாற்றுவது அப்படியானவர்களின் சொற்படியல்ல. நியாயமாக கடமையாற்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள் கூறும் வகையிலொழிய ... ... ... வேறெந்த முறையிலும் இப்பிரச்சினையைத் தீர்க்க எண்ணுவது முட்டாள்த்தனமாகும்.

## தேசிய ஒற்றுமை வேண்டும்

இன்று வடக்கில் இயங்கும் அரசாங்கத்தின் வேலைகளை அமுல் நடத்த முடியவில்லை என்று கௌரவ சபை முதல்வர் கூறுகிறார். என்ன காரணத்தால் அம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது? அவைகளை கட்டுப்படுத்த முடியாததன் காரணத்தாலா? இல்லை. மக்களின் நல்லெண்ணமும் ஒத்துழைப்புமின்றி எந்த அரசாங்கமும், எந்த ஸ்தாபனமும் இயங்க முடியாது. அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் அரசாங்கத்தின் கடமை என்ன என்பது தெளிவாகும். ... ... ... இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இந்நிலைமையை சீரடையச் செய்வதற்கு, பொறுப்பு எந்நேரமும் அரசாங்கத்தைச் சார்ந்ததாகும் ... ... ... இந்நாட்டு மக்களை ஒன்று திரட்டுவதற்கு வழி வகுத்தலை மனதில் வைத்து அரசாங்கம் செயலாற்றவேண்டும். எதனல் அவ்வாறு செய்யவேண்டிய' அவசியம் ஏற்படுகிறது? அவ்வாறு ஒன்று திரட்டுவதன் மூலம் இந்நாட்டு மக்களை ஒரே மக்களாக நம் நாட்டு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்த முடியும். சிங்கள, தமிழ் மக்கள் எல்லோருக்கும் இந்நாட்டில் எதிர்காலம் கிட்டும்.



**2. 15-3-61ல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு எட்மன்ட் சமரக்கொடி பேசியதிலிருந்து சில பகுதிகள் :**

... ... ... உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் அப்பகுதிகளில் ஏராளமான உணவுப் பண்டங்கள் இருப்பதாகவும் ஆறு மாதங்களுக்குப் போதிய அரிசியும் மாவும் இருப்பதாகவும் அவர் (சபை முதல்வர் — ஆசிரியர்) கூறினர்.

அதன்பிறகு, பங்கீட்டு விடயத்தில்தான் கஷ்டம் இருப்பதாகக் கூறினர். கச்சேரிகளில் 'மறியல்' நடைபெற்றுக் கொண்டிருப்பதால் விநியோகம் செய்வது சாத்தியமல்ல என்ருர். சாராயம் விநியோகிக்கப்படுவதைப் பொறுத்தவரையில் அரசாங்கம் வேறு முறைகளை எடுத்து திருப்திகரமான ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும் அவர் கூறினர்.

## பட்டினி போடாதே!

மக்களைப் பட்டினி போடும் விதத்தில் எதுவும் செய்யக் கூடாது என எதிர்க்கட்சி கௌரவ அங்கத்தவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனர். அப்பகுதிகளில் நடைபெறுபவை பற்றி அரசாங்கம் எவ்விதக் கொள்கையை கொண்டிருந்த பொழுதிலும், அப்பகுதிகளில் வாழும் மக்களைப் பசி, பட்டினி போடும் நடவடிக்கைகளை அரசாங்கம் கையாளுவதை அனுமதிக்க முடியாது.

சத்தியாக்கிரகம் காரணமாக கச்சேரிகளை அணுக முடியாதிருந்தால் வேறு பதில் ஒழுங்குகள் செய்ய முடியும் என்பதைப் பற்றி அரசாங்கத்துக்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்பு, அரிசிப் பங்கீடு ஏதோ ஒரு குறிப்பிட்ட மாற்று ஒழுங்குப்படி நடைபெற்று வந்ததென்றும் அதுவே மீண்டும் தொடர்ந்து நடைபெறலாமென்றும் அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டது.

மாற்று ஒழுங்குகள் செய்து அரிசிப் பங்கீடு ஒழுங்காக நடைபெறுகிறதென்று கௌரவ சபை முதல்வர் சொல்லி யிருந்தாரானல், அது மனமுவந்து வரவேற்கக்கூடிய ஒரு செய்தியாயிருந்திருக்கும். ஆனல் அவர் சொன்னது வேறு. தேவையானல், பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் 3-ம் பிரிவையும் உபயோகித்து அத்தியாவசிய சேவைகளை ஒழுங் காக நடாத்த அரசாங்கம் திடம் கொண்டுவிட்டது எனக் கூறினர்.

**… … … இரண்டு வாரங்களுக்கு முன்பு இருந்த மாற்று ஒழுங்கு முறைகளை அரசாங்கம் நடாத்திப் பார்க்க முயன்றதா என்பதே இன்றுள்ள பிரச்சனையாகும்.**

அத்தியாவசிய சேவைகளை ஒழுங்காக நடாத்த அர சாங்கம் உறுதி கொண்டுள்ளதாகவும், தேவையென்ருல், பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமெனவும் இன்று கௌரவ சபை முதல்வர் கூறுகிருர். இப்படியான ஒரு செய்தியைக் கூறக்கூடிய முறையில் அரசாங்கத்தைத் தூண்டக்கூடியதாக நேற் றையைவிட இன்று என்ன நிலைமை உருவாகியுள்ளது என்பதை என்னல் அறியமுடியவில்லை … … வற்புறுத்துதல் களுக்கு செவிசாயாது தீர ஆலோசித்த பின்னரே இப் படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

## பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் வேண்டாம்!

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் 3-ம் பகுதியை நடைமுறைக்குக் கொண்டுவந்தால், எந்த ஒரு பகுதியிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட ஆயுதம்தாங்கிய படை வீரரை அழைக்கலாம் என்பதை கௌரவ சபை முதல்வர் அறிவார். அவ்விடத்தில் ஓர் அவசரகால நிலை இருக்கின்ற தென்ற அடிப்படையில்தான் எல்லாம் நிகழும். வீடுகளைத் தேடுதல், சட்டத்தின் உத்தரவின்றி கைதுசெய்தல், சொத்துக் களைக் கைப்பற்றல் போன்ற பலவற்றை இப்படைவீரர்



கள் செய்ய முடியும். இந்தச் சட்டத்தின் 14 (2) ம் பிரிவு "ஆபத்தான ஆயுதத்தை" பற்றிக் கூறுகின்றது. சாதாரண மான கத்தியும் இப்படியான ஓர் ஆயுதமாகக் கருதப்பட லாம். பொதுசன பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதினல் ஏற்படக்கூடிய விளைவுகளை கௌரவ சபை முதல்வர் ஆலோசித்துப் பார்த்துள்ளாரா ?

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒரு பிர தேசத்தில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்த லாம். அதன் கருத்து யாதென நாமறிவோம். இச் சட்டத் தின் கீழ், ஒன்றுமறியாத மக்களைப் பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர்; கைது செய்துள்ளனர்; பிணைகொடாது சிறைப்படுத்தினர். மேலும் இச்சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்புகள் சில அளிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் பிரகாரம் பொலிஸ் அதிகாரிகளும் படைவீரர்களும் தமது அதிகாரங்களைப் பிரயோகிப்பதை நீதிமன்றத்தில் விசாரணைக்குள்ளாக்க முடியாது. நீதி ஒழுங்கு அவர்களைக் கட்டுப்படுத்தாது. அவர்கள் மக்களைத் துன்புறுத்தலாம்; காயப்படுத்தலாம்; சுட்டுக்கொல்லலாம்; ஆனல் நீதி மன்றத்தில் விசாரணைக்குள்ளாகமாட்டார்கள். இது ஒரு பயங்கரமான படலம்; எம்மை எதிர்நோக்கியுள்ள ஒரு பயங்கரமாகும். இப்படியான ஒரு பொதுசன பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர் மானிக்கிறது என்ற அறிவித்தலை கௌரவ சபைமுதல்வர் இந்தச் சபைக்கு அறிவிக்க நேற்று இல்லாத ஒரு சூழ்நிலை அப்படியென்ன இன்றைக்குப் புதிதாகத் தோன்றியுள்ளது என்று அவரைக் கேட்கிறேன். **பிரத்தியேகமான அதிகாரங் களைப் பிரயோகிக்கவேண்டிய நிலைமை இன்றிருக்கவில்லை. ஆனல், அதிகார வெறிபிடித்தவர்கள், நாட்டில் இனக்கலவரங் கள் ஏற்படுவதை விரும்புபவர்கள், எம்நாட்டு வீதிகளில் இரத்தம் சிந்தப்படவேண்டும் என்னும் அவாவுடையோர், தமது சொந்த நலன்களைப் பெறுவதற்காகச் சிங்களவரும் தமிழரும் முட்டி மோதவேண்டும் என்னும் ஆவலுடையோர்**

தான் நிலைமையை மோசமாக்க அரசாங்கத்தைத் தூண்டிக் கொண்டும் நெருக்கிக் கொண்டுமிருக்கின்றனர்.

3. 2-4-61ல் அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை சமசமாஜ வாலிபர் சங்க சம்மேளனத்தின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் :

"சோஷலிஸப் பாதையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த தேசிய ஒற்றுமை அத்தியாவசியமானதால், தமிழ் பேசும் மக்களுடைய பிரதிநிதிகளோடு இன்று ஏற்பட்டிருக்கும் நிலைமைபற்றி உடனடியாகப் பேச்சுவார்த்தை நடாத்தி நியாயமான உடன்பாட்டுக்கு வரும்படி இந்த மாநாடு அரசாங்கத்தை வற்புறுத்திக் கோருகின்றது."

•••○•••



## IV அவசரகாலச் சட்டம் அநியாயமானது

1. ஏப்ரல் 18, 1961 ல் அவசரகாலச் சட்டப்பிரகடனத்தை எதிர்த்து இலங்கை சமசமாஜக் கட்சி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை :

(தணிக்கை காரணமாகப் பத்திரிகைகளில் இது பிரசுரமாகவில்லை.)

இலங்கையில் மகாதேசாதிபதியின் ஆட்சி நிறுவப்படுவதை இலங்கை சமசமாஜக் கட்சி எதிர்க்கிறது. மகாதேசாதிபதியின் ஆட்சி திணிக்கப்படுவதன் மூலம் சனநாயக முறைகள் அழிக்கப்படுகின்றன என்பதை கடந்த கால அனுபவங்கள் எல்லாம் நிரூபித்துள்ளன; மக்களுக்கு மேலாகப் பொலிஸையும் இராணுவத்தையும் அதிகாரத்தில் வைப்பதன் மூலம் எல்லா வகையான அட்டூழியங்களும் ஏற்படுகின்றன என்பதை மக்களுக்கு ஞாபகமூட்டுகிறோம்.

இலங்கையில் பொதுவான அவசரகால நிலைமை நிலவுகின்றது என்ற கூற்றில் எவ்வித உண்மையுமில்லை இலங்கை முழுவதிலும் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு எவ்வித நியாயமுமில்லை. எனவே, அரசாங்கத்தின் நடவடிக்கையை இலங்கை சமசமாஜக் கட்சி எதிர்க்கின்றது.

மேலும், அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளும் புத்திசாலித்தனமற்ற செய்கைகளும் தான் இன்றைய நிலைமையை உருவாக்கியுள்ளன என்பதை இலங்கை சமசமாஜக் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. உண்மை இவ்வாறிருக்கையில், பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது போல சில பிரதேசங்களில் சீர்குலைந்துள்ள நிர்வாகத்தை திரும்பவும் நிலைநாட்டுவதற்கு மாத்திரமல்லாது தமது நியாயமான மொழி உரிமைகளுக்காகப் போராடும் தமிழ்மக்களின் இயக்கத்தை

நசுக்கவும் அடக்கவும் அரசாங்கம் தனது அவசரகால அதிகாரங்களைப் பிரயோகிக்கும் என்பதில் இலங்கை சமசமாஜக் கட்சிக்கு எவ்வித சந்தேகமுமில்லை. அப்படியான அடக்குமுறைக்கு இலங்கை சமசமாஜக் கட்சி எவ்விதத்திலும் ஆதரவு அளிக்காது. தமிழ் பேசும் மக்களின் நியாயமான மொழிக் கோரிக்கைகளை திருப்திப்படுத்துவதற்கு வேண்டிய சட்டசம்பந்தமான, நிர்வாக நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பது தான் தமிழ்ப்பிரச்சினையைத் தீர்க்கும் ஒரேயொரு மார்க்கம் என்பதைக் கட்சி திரும்பவும் திரும்பவும் கூற விரும்புகின்றது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைகள் கொண்டிருக்க வேண்டியன: நீதிமன்றங்களின் மொழிச் சட்டத்திற்குத் தகுந்த திருத்தங்கள் கொண்டுவர உடனடியான நடவடிக்கை எடுப்பது; தமிழ்மொழி உபயோக (விசேட அம்சங்கள்) சட்டத்தின்கீழ் கொண்டுவரும் விதிகளை திருப்பி வரைவது. சில குறிப்பிட்ட பகுதிகளில் ஓர் அரசாங்கத்தை நிறுவ முயன்றதன் மூலம் சமஷ்டிக் கட்சி முற்றிலும் தவறாக நடந்து கொண்டிருக்கின்றது என்பதை இச்சந்தர்ப்பத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி சுட்டிக் காட்டுகின்றது. அப்படியான பிரிவினை நடவடிக்கைகளுக்கு இப்பகுதிகளில் வாழும் மக்களின் சம்மதத்தை சமஷ்டிக் கட்சி பெறவில்லை. ஒரு ஐக்கிய இலங்கையில் சிறுபான்மையோர் என்ற முறையில் தமது நியாயமான உரிமைகளைத் தமிழ் மக்கள் கோருகிறார்களே தவிர, அவர்கள் கோருவது பிரிவினை அல்ல என இலங்கை சமசமாஜக் கட்சி பரிபூரணமாக நம்புகின்றது.

இறுதியாக, மொழிப்பிரச்சனையில் ஒரு நீதியான தீர்ப்பு ஏற்படத் தவறியுள்ளமை எவ்வாறு மக்கள் முழுப்பேரினதும் சனநாயக உரிமைகளுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது என்பதை இன்றைய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன என்பதை இலங்கை சமசமாஜக் கட்சி வலியுறுத்த விரும்புகின்றது. இத்துறையில் அரசாங்கம் பின்பற்றும் இன்றைய கொள்கைகள், அதிகரிக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், உயரும் வாழ்க்கைச் செலவு, வீழ்ச்சியடையும் பொருளாதாரம் ஆகிய இச்சூழ்நிலையில் அடிக்கடியும் நீண்ட காலமாகவும்



நிலைக்கும் அவசரகால நிலைமைகளுக்கு வழிகோலுவனவாய் உள்ளன. நாடு முழுவதினதும் எதிர்காலத்தை முன்னிட்டும் எல்லா மக்களின் நலவுரிமைகளை முன்னிட்டும் இன்றைய இக்கட்டிலிருந்து மீள வழிகாணவேண்டியது அவசியமாகும்.

2. சித்திரை 18-ல் இலங்கைச் சமசமாஜக் கட்சிக் காரியதரிசி திரு. லெஸ்லி குணவர்த்தன அவசரகாலத்தை அமுலாக்குவதை எதிர்த்துக் கட்சி வெளியிட்ட அறிக்கையை அடிப்படையாக வைத்துப் பிரதிநிதிகள் சபையில் பேசி, கட்சியின் கொள்கையைக் கூறினார்.

3. இவர் பேசியது சிங்களத்தில். அதன்பின் அதே பேச்சின் பொருளைத் திரட்டி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆங்கிலத்தில் பேசினார்:

**டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா**

ஒரு வேண்டுகோள். கனந்தங்கிய சபையோர் பொறுத்தருளுவார்கள் என நம்புகிறேன். — ஒரு ஐந்தாறு நிமிடங்கள் மாத்திரம் — எங்கள் கட்சிக் காரியதரிசி கட்சிச் சார்பில் உத்தியோக பூர்வமாக இவ்விஷயத்தையிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். முறைப்படியாக அவர் பேசியது சிங்களத்தில். சிங்கள மொழியை விளங்கிக்கொள்ள மாட்டாதவர்கள் பலர் இந்த நாட்டில் இருப்பதால் எங்கள் கட்சிக் காரியதரிசி சாற்றியவையின் சாரத்தை ஆங்கிலத்திற் கூற விரும்புகின்றேன்

சபாநாயகரே, இலங்கையில் தேசாதிபதியின் ஆட்சியை நிறுவுவதை இலங்கை சமசமாஜக் கட்சியின் அங்கத்தவர் ஆகிய நாம் எதிர்க்கிறோம். தேசாதிபதியின் ஆட்சி சுமத்தப்படின் அது ஜனநாயக முறைகள் அனைத்தையும் அழித்துவிடுவதுமன்றி, மக்களை அடக்குவதற்காகப் பொலிசாரையும் ராணுவப்படையினரையும் அதிகாரபீடத்தில் வைத்து, மிதமிஞ்சிய தீச்செயல்கள் எத்தனைக்கும் காலாகவும் இருக்கும். முன்பு நாம்பட்டபாடு இதற்கு அத்தாட்சியாகும் என்பதை நாம் மக்களுக்கு நினைவூட்டுகின்றோம்.

## தமிழ்மொழி உரிமை அளி!

எங்கள் பார்வையில், இலங்கையில் ஒரு அவசரகால நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்ற அறிவித்தலில் உண்மை ஒன்றும் இல்லை. இலங்கை எங்கும் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்வதற்கு நியாயம் ஒன்றுமே இல்லை. **ஆகவே, இலங்கை சமசமாஜக் கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கையை எதிர்க்கிறது..** மேலும், அரசாங்கத்தின் தீய கோட்பாடுகளும், புத்தியற்ற நடவடிக்கைகளுமே இன்றைய சூழ்நிலையை வருவித்தனவென்றும் இலங்கை சமசமாஜக் கட்சி சுட்டிக் காட்டுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், பிரகடனத்தில் கூறப்பட்டவாறு சில பாகங்களில் தகர்க்கப்பட்ட நிர்வாகத்தைச் சீராக்குவதற்காக மாத்திரமன்றி, **தமிழரின் நீதியான மொழியுரிமை இயக்கத்தையும் முறியடித்து நசுக்குவதற்காக அவசரகால அதிகாரத்தை அரசாங்கம் உபயோகிக்கப்போகின்றது என்பதையிட்டு இலங்கை சமசமாஜக் கட்சிக்கு எள்ளளவேனும் சந்தேகம் இல்லை.** இலங்கை சமசமாஜக் கட்சி இப்படிப்பட்ட அடக்கு முறைகளை எவ்விதத்திலும் ஆதரிக்க முடியாது. தமிழ் பேசும் மக்களின் நீதியான மொழிக் கோரிக்கைகளை பூர்த்தியாக்கக்கூடிய சட்ட, நிர்வாக நடவடிக்கைகளைத் தேவையான அளவு அரசாங்கமே அமுலாக்கினால் ஒழிய, தமிழ்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதைத் திரும்பவும் இலங்கை சமசமாஜக் கட்சி வற்புறுத்துகிறது. நீதிஸ்த்தல மொழிச் சட்டத்தில் நியாயமான திருத்தங்களும், தமிழ்மொழி (விசேஷ ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விதிகளை மாற்றி அமைத்தலும் உட்பட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

சில பாகங்களில் வேறொரு அரசாங்கத்தை அமைப்பதற்காகச் சமஷ்டிக் கட்சி எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெறும் பிழையானவை என்பதை எடுத்துக்காட்ட இச்சமயத்தை இலங்கை சமசமாஜக் கட்சி உபயோகிக்கின்றது. இந்த முறையில் நாட்டைப் பிழந்து வைக்கும் முயற்சிகளை நடத்துவதற்கு மக்கள் அவர்களுக்கு அனுமதி அளிக்க



வில்லை. சிறுபான்மையினரின் கோரிக்கை இலங்கையை இருநாடுகளாகப் பிரிப்பதல்ல: ஒற்றுமைப்பட்ட நாட்டில் நீதியான சிறுபான்மை உரிமைகளுடன் வாழவேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை என்பதை இலங்கைச் சமசமாஜக் கட்சி பூரணமாக நம்புகிறது.

இந்த மொழிப் பிரிச்சினையை நீதியான முறையில் தீர்க்கத்தவறியதால் எவ்வாறு மக்களின் சனநாயக உரிமைகள் பங்கப்பட்டிருக்கின்றன என்றதைத் தற்கால சம்பவங்கள் மேலும் தெளிவாக்குகின்றன. இதை இறுதியில் இலங்கை சமசமாஜக் கட்சி வற்புறுத்தவேண்டியிருக்கிறது. அரசாங்கம் இத்துறையில் எடுத்துக் கொண்ட அரசியல் சூழ்ச்சிகள், சிதைந்துபோகும் பொருளாதாரத்தையும், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவையும், வளர்ந்து கொண்டு வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கொண்ட இந்தச் சூழ்நிலையில், அடிக்கடியாக நீண்டநாள் அவசரகால அடக்கு முறைகளை எதிர்காலத்தில் அளிக்கப்போகின்றன. சகல மக்களின் நயத்தையும் முழுநாட்டின் வருங்காலத்தையும் எதிர் நோக்கி, தற்போதய சிக்கலிலிருந்து விரைவான விடுதலையைப் பெறுவது இன்றியமையாதது.

**4. சித்திரை 18-ல் செனெற்றர் டொறிக் டி. சூஸா செனெற் சபையில் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப் பேசியதிலிருந்து சில பாகங்கள்:**

## சலுகைகளே அவமதிப்பாகும்

### செனெற்றர் டொறிக் டி. சூஸா

......இந்த வெறுப்புக்கிடமான அரசாங்கத்தின் "நிர்வாகச் சீர்கேட்டுப் பிரகடனம்" இந்த நாட்டின் பரிபாலனத்தைக் கையேற்றவர்களின் பலமாத அதிகார வெறியினால் உண்டான திறமையீனத்தினதும் தகுதியின்மையினதும் விளைவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கபடநாடக அரசியல் வாதிகளால், பிரச்சினையாக்கப்பட்ட தமிழ் மொழி உபயோகம் சம்பந்தமான பிரச்சினை பங்குனி, ஆடித் தேர்வுகளிலேயே தலை காட்டியது. இது சம்பந்தமாக 1958-லும் 1959-லும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கசப்பான அனுபவத்தினால் நியாயமானதோர் வழியில் கட்சி நடக்கச் சித்தமாகியது. அப்போது இருதிறத்தாரிடமும் நம்பிக்கை நிலவியதோடல்லாமல், இம்மொழிப் பிரச்சினைக்கு முடிவு காணாவிட்டாலும், இது தீர்த்துவைக்கப்படும் என்ற நம்பிக்கை உருவாகக்கூடிய சுமுகமான சூழ்நிலைக்கு வழிகோலியிருக்கலாம். துர்அதிஷ்டவசமாக, யார் கையில் இம்மொழிப் பிரச்சினை, ஒப்படைக்கப்பட்டிருந்ததோ, அம் மந்திரியார் ஒன்றன் பின் ஒன்றாகப் புரிந்த பாரதூரமான குறைகள், குரோதத்தை வளர்த்தது.

இவைகளிலிருந்து தேவையற்ற மனத்தாங்கலையும் அருவருப்பையும், சிங்கள உறுப்பினருக்குக் கூடத்தரக்கூடிய சில நிலையற் கட்டளைகள், இரு சபைகளிலும் உண்டாக்கப்பட்டன. கசப்பான கருத்து வேற்றுமைகளுக்குப் பின், அதிஷ்டவசமாக சனப்பிரதிநிதிகள் சபையில் நியாயமும், அமைதியும் நிலவுவதாயிற்று. தக்கபடி நிலையற் கட்டளைகள் திருத்தம் செய்யப்பட்டபோதும், கனம் நீதி மந்திரியும் சபை முதல்வரும் (மூதவை) மேற் சபைக்கான நிலையற் சட்டங்களில் மாற்றம் செய்யவில்லை என்பதைக் கவலையோடு தெரிவிக்கின்றேன்.

**அதே நேரத்தில், தமிழ் மொழிச் (விசேட சலுகைகள்) சட்டத்தின் கீழ் தருவதாகச் சொல்லும், தமிழ் மொழியில் எழுதப்படும் கடிதங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தமிழிலேயே பதில் கொடுத்தல் போன்ற உரிமைகள், தமிழ் மக்களை அவமதிப்பதொன்றாகும்.**

நாட்டின் பெருமைக்கே ஓர் பேரிழுக்கான நீதிமன்ற மொழி மசோதா, கொண்டுவரப்பட்டபோதே, சனப்பிரதிநிதிகள் சபையில் ஒவ்வொரு அங்கத்தவரும் — உண்மை



யாக 140 அங்கத்தவர்களுக்கு மேற்பட்டோர், கனம் நீதி மந்திரி அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடியது என்று கருதினால் — சில நீதிமன்றங்களில் தமிழ் மொழியை உபயோகப்படுத்தும் அதிகாரத்தைக் கனம் மந்திரிக்கு நல்கும், கேடற்றதோர் திருத்தப் பிரேரணையை விரும்பினார்கள் என்பது வெளிப்படையாகும். ஆனால் ஒரு சில மேலிடத்தாரின் விரிவற்ற அறிவின்மையால், சிறுபான்மையோருக்கும் பெரும்பான்மையோருக்கும் இடையே உள்ள பிளவை நீக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது.

## எரியும் நெருப்பில் எண்ணெய்!

இந்த மனமுறிவு காலகெதியில், சமஷ்டிக் கட்சியின் சத்தியாக்கிரகத்துக்கு வழி கோலியது. நான் இங்கு சமஷ்டிக் கட்சிக்காகப் பரிந்து பேச வரவில்லை. ஆனால் "சமஷ்டிக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்துவது அசாத்தியம்; அவர்களையிட்டு யார் கவலைப்படுவது?" என்று மட்டும் அரசாங்கம் கூறமுடியாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனது கடமையைச் செய்யவேண்டிய ஒரே ஒரு கட்டுப்பாடுதான் அரசாங்கத்தின் அலுவலாக இருக்க முடியும். அரசாங்கம் சிறுபான்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தங்களால் முடிந்தவற்றையெல்லாம் செய்துவிட்டது என்று நிரூபித்தால் சமஷ்டிக் கட்சியை அரசாங்கம் வேண்டியபடி தூற்றலாம். ஆனால் விவாதம் இதுவல்ல. திரு. செல்வநாயகம் இதைச் செய்கிறார், முடியாததொன்றைக் கேட்கிறார் என்று கூறுவது விவாதம் அல்ல. இது பொருத்தமுமற்றது. அரசாங்கம் தன் கடமையைச் செய்ததா? அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களை, தனிப்பட்ட முறையிற் கேட்டால் "நான் ஆயத்தம், ஆனால் அவர் இல்லை." இந்த ரீதியிற்றான் இவர்கள் பேசுகிறார்கள். இன்று காலையில் மதிப்புக்குரிய ஜனப்பிரதிநிதிசபை உறுப்பினர் ஒருவர், "நான் என்ன செய்ய முடியும்? இப்பிரச்சினையே இவ்வாறு

உருவாக்கப்பட்டிருக்கக்கூடாது" என்று எனக்குக் கூறினார். இப்படித்தான் இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் "சமஷ்டிக் கட்சி இப்படியும் அப்படியும் செய்கிறது" என்று கதை அளக்கிறார்கள். **நாட்டின் கணிசமான சிறுபான்மையினருக்குத் தன் கடமையைச் செய்யத் தவறியதற்கு, எந்தவிதமான காரணத்தையும் அரசாங்கம் காட்டமுடியாது.** சத்தியாக்கிரகம் ஆரம்பித்ததிலிருந்து நாள்வீதம் சூழ்நிலை மோசமடையத் தொடங்கியது. அரசாங்கத்துக்கும் சமஷ்டிக் கட்சிக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளை இட்டு நான் பேசவில்லை — ஆனால் பேச்சு வார்த்தைகளுக்கு வாய்ப்பு இருக்கத்தான் செய்தது. வேறு எதுவிருப்பினும் அரசாங்கம் தனது கடமையைச் செய்தல் வேண்டும். அரிய வாய்ப்புக்கள் தவறவிடப்பட்டதோடமையாது, தேவையற்ற குரோதங்கள் வளர்க்கப்பட்டன. அரசாங்க இலாக்கா அறிக்கைகளைத் தமிழில் வெளியிடும் செயல் இந்தப் புதினமான நேரத்தில், கனம் நீதி மந்திரி அவர்களால் தடுக்கப்பட்டதேன் என்று கேட்கும் சந்தர்ப்பம் சென்ற கூட்டத்தில் எனக்குக் கிடைத்தது. **பற்றி எரியும் தீக்கு எண்ணெய் ஊற்றும் கைங்கரியத்தைப் புரிய இந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்தார் நம் நீதி மந்திரி! இதை விடக் கனம் நீதி மந்திரி காட்டக்கூடிய, மடமையும் அறிவீனமும்தான் என்ன?** என்று கேட்கிறேன்.

## படுகுழியை நோக்கி !

அரசாங்கம் உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறது. சத்தியாக்கிரகம் ஆரம்பமான முதல் இரு வாரங்களிலும் விநியோகிக்கப்பட்ட **அரிசி திடீர் என்று நிறுத்தப்பட்டதின் மர்மமென்ன?** திருப்திகரமாக நடந்த அரிசிப் பங்கீட்டு ஒழுங்கு ஏன் தொடர்ந்து நடத்தியிருக்கக்கூடாது? **சத்தியாக்கிரக இயக்கத்தை நசுக்க, பட்டினி போடுதலை அனுமதிக்கத் தீர்மானித்து விட்டது.** எனவே அவசரகால நிலைக்கு முந்தியகால எல்லையில் தேவையற்ற ஆத்திரமூட்டலைக் கையாண்டு, தன் திறமையீனத்தை அரசாங்கம் காட்டியது. அரசாங்கம் நுட்பமாகத் தீர்க்க வேண்டிய மொழிப் பிரச்சினையை, யார் கையில் ஒப்படைத்திருந்தபோதிலும், கடந்த சில மாதங்களாக இப்பிரச்சினை கையாளப்படுவதிலும் ஆயிரம் மடங்கு திறமையாகவும் புத்தி சாதுரியமாகவும் நடத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்று விசுவாசமாகக் கூறுகிறேன்.



நாம் இதன் விளைவுகளைக் கவனிப்போம் — நாடு பூராவும் அவசரகால நிலைமை, புதினத் தணிக்கை, பொதுக் கூட்டங்கள் போன்றவைகளில் தலையீடு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் பிரசுரிக்கப்படக் கூடாது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. **நாங்கள் ஒரு செங்குத்தான சரிவிலே போய்க்கொண்டிருக்கிறோம்.** முன்பும் ஒருமுறை இப்படிப்பட்ட சரிவில் சென்றோம். மந்திரிகளால் ஆட்சியை நடத்த முடியாது, தேசாதிபதியின் உதவியை நாடுவதாக இருந்தால் அரசியல் திட்டத்தையே இவர்கள் மாற்றட்டும். அரசியல் திட்டம் மந்திரிகளின் ஆலோசனையில் தேசாதிபதி இயங்க வேண்டும் என்று கூறுகிறதே ஒழிய, தேசாதிபதியின் ஆலோசனைப்படி மந்திரிகள் கடமையாற்ற வேண்டும் என்று கூறவில்லை.

* * *

இந்த மந்திரி சபை ஆட்சிப்பழுவைச் சுமத்தலில் அலுப்புத்தட்டி, அதிகாரத்தைத் துறக்கவே ஏகமனதாகத் தீர்மானித்துவிட்டது என்று நினைக்கிறேன். இதுதான் நடைபெற்றிருக்கிறது. முன் ஒருபோதும், எட்டுமாத அவசரகால நிலைமையில், பட்டாளத்தார் தங்கள் மீசைகளைத் தடவிக்கொண்டிருக்க, நாட்டில் என்ன நடந்தது என்பதையும் நாங்கள் அறிவோம்.

* * *

இந்த நாட்டின் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் நடந்தவற்றை நாம் அறிவோம். மீண்டும் அதுதான் நடக்கும்.

இலங்கையின் அரசியற் சுகவாழ்வு ஜனநாயகத்தில் தான் தங்கியிருக்கிறது. இந்தவிதமாக இடையிலே சட்டமின்றித் தடைப்படுத்தக்கூடிய அளவுக்கு ஜனநாயகம் இங்கு நீண்டநாட்கள் வாழவில்லை. ஜனநாயகத்தின் ஜீவநாடியை அறுப்பது போன்ற — புதினத் தணிக்கை, பட்டாள ஆட்சி, மகாதேசாதிபதியின் அதிகாரங்களால் நாட்டில் அரசியல் வாழ்வு நாற்றமெடுக்கும்.

*   *   *

இச் சீர்கேடுகளைத் தாங்குவதோடு, அரசாங்கம் சமாளிக்க முடியாத ஒரு நேரத்திலே, நாட்டு நிதிநிலை படுமோசமாகிக் கொண்டிருக்கும் நிலையிலே, பொருளாதாரம் சீர்கெட்டுவரும் பொழுதிலே, இலங்கைத் தேசிய வாழ்வே உருக் குலைதலையும் தாங்குதல் தவிர்க்க முடியாத தொன்றாகிவிடும்.

நாடு முழுவதையும் குழப்பத்தில் வீழ்த்தி, தேவைக்கு மிகுந்த அதிகாரத்தையும் கொடுக்கும் — சட்டத்துக்குப் புறம்பான விதிகளை உருவாக்குவதற்கு இதுதானா உகந்த நேரம்?

## தமிழ் அரச கருமமொழி!

சிறுபான்மையினரின் பிரச்சினைகளைச் சிரைத்தையோடு கவனிக்காவிட்டால், முன்னேற்றம் ஏற்படாது என்று இவ்வரசாங்கத்துக்கு ஒரு முறைக்குப் பலமுறை சொல்லி இருக்கிறோம். யாருக்கும் தனி அரசாங்கம் கொடுக்கும்படி யான் கூறவில்லை. யான் இத் தனி அரசாங்கத்தை எதிர்ப்பவன். ஆனல் அரசாங்கத்தைத் தன் கடமையைச் செய்யும்படி கேட்கின்றேன். நான் செய்யவேண்டும் என்று கூறுவதை அரசாங்கம் உடன்பட்டுச் செய்ய முடியாதிருக்கலாம். ஆனல், அரசாங்கம் தனது வரம்புகளுக்குட்பட்டாகிலும் அதைச் செய்யலாம்.



**செனெற்றர் துனுவில**

என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்?

**செனெற்றர் கௌரவ பர்ணுந்து**

சம அந்தஸ்து!

**செனெற்றர் டி. சூஸா**

எனது கட்சி தமிழும் ஒரு ஆட்சி மொழியாக இந்த நாட்டில் அமைய வேண்டும் என்று கருதுகிறது.

**செனெற்றர் கௌரவ பர்ணுந்து**

இல்லை — சம அந்தஸ்து.

**செனெற்றர் டி. சூஸா**

மிகவும் நல்லது. தமிழும் ஒரு ஆட்சி மொழியாக முடியாது என்கிறது அரசாங்கம். ஆனல் அரசாங்கமும், அதன் காலஞ் சென்ற தலைவர் பண்டாரநாயக்காவும் தமிழ்மொழி உபயோக விஷயத்தில் தமிழருக்கு நீதி வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இவ் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததோடல்லாமல், மீறப்பட்டும் விட்டன.

**செனெற்றர் கௌரவ பர்ணுந்து**

இல்லை — ஒவ்வொன்றும் காப்பாற்றப்பட்டன.

**செனெற்றர் டி. சூஸா**

எனவே, நான் மீண்டும் கூறுகின்றேன், அரசாங்கம் சமஷ்டிக் கட்சியைக் குறைகூற முடியாது. எனக்கு சமஷ்டிக் கட்சியைப் பற்றி அக்கறை இல்லை. அரசாங்கத்தைக் கடமையைச் செய்யும்படி கேட்கிறேன். நாட்டு நிலைமையை ஆராயும்படி எச்சரிக்கிறேன்.

**செனெற்றர் எம். பீ. டி. சொய்ஸா**

உமது எச்சரிக்கை எங்கட்கு வேண்டியதில்லை.

**செனெற்றர் டி. சூஸா**

இப் பிரகடனத்தின் விளைவாக ஜனநாயக அரசாங்கத்தை மூச்சுத்திணற வைக்கிறீர்கள். இவ் வடக்கு முறைச் சட்டத்தை வாபஸ் பெறும்படி அரசாங்கத்தை வினயத்துடன் கேட்டுக் கொள்கிறேன். வேண்டிய வழிவகைகளை —

**செனெற்றர் கௌரவ பர்ணுந்து**

வேண்டிய வழிவகைகளைக் கையாண்டு வருகிறோம்.

**செனெற்றர் டி. சூஸா**

திரும்பவும் பேச்சுவார்த்தை நடத்தும்படி நீதி அமைச்சரைக் கேட்கவில்லை. ஆனல் கடமையைச் செய்யும்படி கேட்கிறேன். சடுதியாக அரசாங்க அலுவலக அறிக்கைகளைத் தமிழில் வெளியிடும் வழக்கத்தை நிறுத்தியதால் என்ன நன்மையை அடைந்தார்? கனம் நீதிமந்திரிப் பொறுப்பைப் பிறன் தலையில் சுமத்த எத்தனிக்கிறுர்.

5. **சித்திரை 19-ல் சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் கொல்வின் ஆர். டி. சில்வா பேசியது :**

(அவசரகால - ஊரடங்குச் சட்டநிலையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் செய்திகளைச் சபைக்கு அறிவிக்க வேண்டிய அமைச்சர் சமுகமாயில்லாததைக் கண்டித்துப் பேசியதின் மொழிபெயர்ப்பு.)

**டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா**

இத்துடன் இன்னுமொன்றைக் கூற விரும்புகிறேன். விவரமாகவும் பிந்தியதுமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அதிகாரபூர்வமாக விடையளிக்கக் கூடிய அந்த ஒரே ஒரு அங்கத்தவர் இவ்விடத்தில் இல்லாதது அரசாங்கம் செய்துள்ள ஒரு பாரதூரமான தவருகும். செனெற் சபை இன்று கூடவில்லை; எனவே கௌரவ பிரதம மந்திரியிடம் வினவெழுப்ப முடியாது. இவ்விடயங்களைப் பற்றி அதிகார பூர்வமாக விடையிறுக்கக்கூடிய ஒருவரால் நாளாந்தம் ஓர் அறிக்கைவெளியிட வேண்டுமென நான் கூறுகிறேன். எவ்விதச் சூழ்நிலையிலும் ஓர் அவசரகால நிலைமையில் இச்சபை தனது உரிமைகளைக் கைவிடவோ துறக்கவோ மாட்டாது என நான் நம்புகின்றேன்.



6. **சித்திரை 20ல் சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் திரு. எட்மன்ட் சமரக்கொடி திரு. சிவசிதம்பரம் காயப்பட்டதைப் பற்றிப் பேசியதின் மொழி பெயர்ப்பு:**

**திரு. எட்மன்ட் சமரக்கொடி**

நான் ஓரிரண்டு குறிப்புகள் கூற விரும்புகின்றேன். நேற்றும் அதற்கு முன்னைய நாளும் உலாவிய ஓரிரண்டு வதந்திகள் கௌரவ நிதி அமைச்சரின் அறிக்கையின் முற்பகுதியினல் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அதாவது, சுடுபட்ட சம்பவத்தைப் பொறுத்தவரையில் –

**கௌரவ எப். ஆர். டயஸ் பண்டாரநாயக்கா**

ஒரு சம்பவம்.

**திரு. எட்மன்ட் சமரக்கொடி**

கடந்த இரு நாட்களாக மனக்கிலேசத்தை உண்டு பண்ணும் இன்னெரு வதந்தி பற்றிக் கௌரவ அங்கத்தவர்கள் தெரிந்திருப்பார்கள். நான் அதை இப்பொழுது கூற விரும்புகின்றேன். இச்சபையின் ஒரு கௌரவ அங்கத்தவர் சிறைப்படுத்தப்பட்டு மோசமான முறையில் தாக்கப்பட்டுள்ளாரென்று ஒரு வதந்தி உலாவியது. தாக்குதலினல் ஏற்பட்ட காயங்கள் பற்றியும் நாங்கள் கேள்வியுற்ருேம். அவருடைய விலாவெலும்புகள் முறிந்து அவர் ஆஸ்பத்திரியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. சிறைப்படுத்தப்பட்டு தடுப்புக் காவலிலுள்ள எவருக்கேனும் ஏற்பட்டுள்ள ஏதாவது காயங்கள் பற்றி கௌரவ நிதி அமைச்சர் அறிவாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**கௌரவ எப். ஆர். டயஸ் பண்டாரநாயக்கா**

கௌரவ அங்கத்தவர் குறிப்பிட்ட வதந்தியைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் இதைப் பற்றிக் கேள்விப்

படவில்லை, கௌரவ அங்கத்தவர் யாரைப் பற்றிக் குறிப்பிட்டார் என்றும் எனக்குத் தெரியாது.

**கௌரவ அங்கத்தவர்**

திரு. சிவசிதம்பரம்

**7. சித்திரை 20ல் சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் அவசரகால நிலைமையில் சபையின் குழு ஒன்று அமைக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசியதில் சில பகுதிகள்:**

**டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா**

ஓர் அவசரகாலநிலை ஆட்சி மக்களைப் பெருமளவில் பாதிக்கின்றது என்பதை ஒரு கௌரவ அங்கத்தவரும் சந்தேகிக்கமாட்டார் என நான் உறுதியாக நம்புகின்றேன். குற்றமுள்ளோரையும் குற்றமற்றவர்களையும் இது பாதிக்கும். குற்றமுள்ளவர்களை எவ்வளவு கடூரமாகப் பாதிக்கின்றதோ அதே போல குற்றமற்றவர்களையும் பாதிக்கின்றது. எனவே முறையீடுகள் செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டியது முக்கியமாகின்றது.

இப்பொழுது நான் கூறுவதை ஒருசிலர் தவருக விளங்கக்கூடிய நிலையிலும் நான் ஒரு விடயத்தைக் கூறப்போகின்றேன். இன்று அவசரகாலச் சட்டம் பூரணமாகவும் கடூரமாகவும் அமுல் நடாத்தப்படும் பகுதிகளில் வாழும் மக்களின் உத்தியோக பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முழுப்பேரும் இச்சபையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுமல்லாமல் அரசியல்பொது வாழ்விலுமிருந்தும் அகற்றப்பட்டுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் அச்செய்கையின் சரி பிழையைப் பற்றி நான் இப்பொழுது விவாதிக்கவில்லை. **இப்பகுதிகளில் வாழும் மக்கள் தாம் விரும்பும் முறையீடுகளைச் செய்வதற்கு அதிகாரிகளிடம் வேண்டிய சாதனங்களாக இப்பொழுது அம்மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் அவர்களுக்கில்லை என்பதையே நான் சுட்டிக்காட்டுகின்றேன்.**



இங்கிலையில், தகுந்த விடயங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட கௌரவ அமைச்சருக்கு முறையீடுகள் செய்வதற்கு வேண்டிய சாதனத்தை அமைக்கவோ நிறுவவோ வேண்டியது அத்தியாவசியமாகின்றது. எனது அபிப்பிராயத்தில், கடந்த அவசரகால நிலையில் நடைமுறையிலிருந்த சபைக் குழு என்ற முறை சாலச் சிறந்ததாகும்.

**8. சித்திரை 20ல் இதை ஆதரித்து டாக்டர் என். எம். பெரேரா பேசியதின் மொழிபெயர்ப்பு.**

**டாக்டர் என. எம். பெரேரா**

இப்பொழுது எனது நண்பர் கூறியவிஷயத்தில் ஒரு வார்த்தை கூறவிரும்புகிறேன். அதாவது அதற்குச் சார்பாக ஒன்று கூறப்போகின்றேன். இந்த அவசரகாலம் பிரகடனம் செய்த பொழுது, நான் இங்கே இல்லாததையிட்டு வருதப்படுகிறேன். ஆனாலும் இதைக் கூறுவேன். இவ்வகையான ஒரு குழுவை அமைப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுவரும் ஒரு முன் நிகழ்ச்சி என்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் முறைப்படியே நடந்தது. 1958-ல் நாங்கள் ஏற்றுக்கொண்ட முறையாதெனில், அவசரகாலம் பிரகடனமானதும், உடனடியாக (தன்னுற்றலாகவே) இக்குழு இயங்கும். சபைலிகிதர் (clerk) குழுவைக் கூட்டும் காரியதரிசியாவார்.

**9. சித்திரை 21ல் சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் டாக்டர் என். எம். பெரேரா பாராளுமன்றம் கூடவேண்டும் என்பதை வற்புறுத்திப் பேசியது.**

**டாக்டர் என். எம். பெரேரா**

மே மாதம் 2-ந் திகதி வரைக்கும் சபை ஒத்திவைக்கப்பட இருப்பதால், கடந்த கால மரபை ஏற்று இடைக்காலத்தில் இயங்குவதற்கு ஒரு குழு நிறுவப்படுமா என கௌரவமான சபை முதல்வரிடமிருந்து அறிய விரும்புகிறேன். அப்படி ஒரு குழு அமைக்கப்படாவிடின் சபை தொடர்ந்து கூட

வேண்டுமென நான் மிகவும் வற்புறுத்த விரும்புகிறேன். அவசரகால நிலைமையில், பாராளுமன்றம் ஒத்தி வைக்கப் படுவதை எங்களால் அனுமதிக்க முடியாது. அடுத்தவாரம் நாம் கூடாது இருப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை. இதற்கு வசதியில்லையென ஏதாவது காரணத்திற்காக அரசாங்கம் கருதினால், ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அவசரகால நிலைமையில் அவ்வாறு செய்யப்பட வேண்டியது சபைக்கு நீதி வழங்குவதாகும் என நான் கருதுகிறேன்.

10. திரு. சிவசிதம்பரம் காயமடைந்தார் என எழுந்த வதந்தியையிட்டுத் திரு. எட்மன்ட் சமரக்கொடி சித்திரை 21ல் பாராளுமன்றத்தில் வினவியது.

திரு. எட்மன்ட் சமரக்கொடி

கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு முக்கிய விடயத்தைப் பற்றி நான் கூறவேண்டும். இரு நிமிடங்கள் கூட எனக்குத் தேவையில்லை. இச்சபையின் ஒரு கௌரவ அங்கத்தவரைப் பற்றி நான் நேற்று கேள்விப்பட்ட ஒரு வதந்தி பற்றியதாகும். இப்பொழுது இவ்விடயத்தைப் பற்றிக் கூற நான் விரும்புகிறேன். விடை கிடைக்காவிடினும், பறுவாயில்லை.

சபாநாயகர்

ஒழுங்கு! வெலிகமக் கௌரவ அங்கத்தவர்.

∘∘∘○○∘∘∘



## V. மொழி உரிமை அளி

1-5-61-ல் இலங்கையிலுள்ள தொழிற் சங்கங்களின் இணைப்புச் சபையின் ஆதரவில் கொழும்புக் காலிமுக மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய மே தினப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள். தோழர் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், திரு. தொண்டைமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரெஸ் பங்கு பற்றியதை ஆட்சேபித்து இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி பங்கு பற்றாதது குறிப்பிடத்தக்கது.

### தீர்மானங்கள் :

*1.* வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பாரதூரமாக வளர்ந்த பாஷைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதன் அவசியத்தைத் தொழிலாளர் சங்கத்தின் மே தின விழா வற்புறுத்துகின்றது.

*2.* மொழியுரிமையைப் பற்றித் தமிழ் மக்கள் கொண்ட குறைபாடுகளை நியாயமானதென்று கொண்டு அரசாங்கம் அதற்கு முடிவுகாண வேண்டும்.

*3.* இந்தப் பிரச்சினை தீர்த்து வையாத வரையும் இது நாட்டு மக்களின் ஒற்றுமைக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் வகுக்கும் திட்டங்களுக்கு முட்டுக் கட்டையாய் இருக்கும் என்பதை அரசாங்கத்துக்கு எச்சரிக்கின்றது.

*4.* வெற்றியைத் தந்தாலும், பட்டாளத்தை உபயோகிப்பது இந்தப் பிரச்சினையை உண்மையில் தீர்த்து வையாதென்பதையும் எச்சரிக்கின்றது.

*5.* தொழிலாளர் சங்கத்தின் இந்த மே தின விழா, இந்நாட்டு மக்களில் ஒரு சாராருக்குச் சனநாயகக் குடியாட்சி

உரிமை யளியாதிருக்கும் கொள்கையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. இந்திய வம்சா வழியினரான பெரும்பாலான தோட்டக் குடிசனங்களுக்கும் இவ்வுரிமைகள் மறுப்பதை விட்டு அரசாங்கம் நல்ல முறையில் முடிவு காண வேண்டும்.

**2. வட-கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் ராணுவ அட்டூழியங்களைப் பற்றி திரு. எட்மன்ட் சமரக்கொடி அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசியதில் சில பகுதிகள் : (3-5-61)**

**திரு. எட்மன்ட் சமரக்கொடி**

சபாநாயகரே, அவசரகாலம் பிரகடனமாகி, இந்த நாடு அவசரகால நிலைமைக் குள்ளாகி, இன்று பதின்மூன்று நாட்களாயின. நாட்டின் நிலையை ஆராய்ந்து அவசரகாலத்தால் வந்துள்ள ஊழ்களைச் சரியாக அறிய வேண்டியது அவசியம்.

இன்று செய்தித் தடுப்பு இருப்பது கௌரவ அங்கத்தவருக்குத் தெரிந்த விஷயம். இத் தடுப்பின் நோக்கம் உண்மையைப் பரவ விடாமல் தடுப்பது தானே. நீங்கள் எல்லாச் செய்திகளையும் பிரசுரிக்க விடமாட்டீர்கள். இது உண்மை. இது அப்படியாயின், நான் சொல்லுவதை மன்னிக்க வேண்டும், நீங்கள் தரும் செய்திகள் தான் உண்மையாக நடந்தவையென்றோ, அல்லது முழுப் படமென்றோ நம்பிக் கொண்டு திருப்தியாயிருக்க முடியாது.

**கௌரவ அங்கத்தவர் ஒருவர்**

ஏன், நீரே யாழ்ப்பாணம் போய்ப் பார்த்துக் கொள்ளலாமே.

**திரு. எட்மன்ட் சமரக்கொடி**

போய்ப் பார்க்கத்தான் எண்ணியிருக்கிறேன். உங்கள் செய்திகளை நான் நம்பவில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்தளவில் யாழ்ப்பாணத்திற்குப் போவதில் ஒரு கஷ்டமும் இராது.



தரை கடல் ஆகாயப் படைகள் ஆகிய மூன்று ராணுவ உறுப்புகளும், தொண்டர் படைகளும், சேவைக்கழைக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிவோம். உள் நாட்டுக்கலகங்களை அடக்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்காகவே அழைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அரசாங்கத்தின் சாதாரண அலுவல்களை நடத்தவும் அழைக்கப் பட்டிருக்கின்றன.

செய்திகளைக் கவனமாக ஆராய்ந்துள்ளேன். உள் நாட்டுக் கலகங்களை அடக்கவோ அல்லது தடுக்கவோ ராணுவ சேவைகள் உபயோகிக்கப் படுவதாக நான் காணவில்லை. ராணுவ சேவைகளை அனுப்பிய காலந் தொட்டு கலகங்கள் ஏதும் நடந்தவையாக நான் அறியவில்லை. உணவு, போக்குவரவு, துறைமுகம், சுகாதாரம் முதலிய சேவைகள் எவற்றையாகிலும் கையேற்று நடத்த ராணுவ சேவைகள் கூப்பிடப் பட்டதாகவும் ஒரு செய்தியும் இருப்பதாயில்லை.

**அப்படியாயின், தரை கடலாகாய ராணுவப் படைகள் அங்கே என்ன செய்கின்றார்கள்,** என்று கேட்பது அவசியம். இது பொருத்தமான கேள்வியாகும். நாளுக்கு ஒரு லட்சமோ, அல்லது இன்னுங் கூடிய தொகைப் பணத்தையோ அரசாங்கம் ராணுவத்தில் செலவிடுகின்றது. வட-கிழக்கு மாகாணங்களிலும், தோட்டப் பிரதேசங்களிலும் பொதுவாக அவைகள் இருக்கின்றன. ஆனால் என்ன வேலை செய்துவருகின்றன?

## ராணுவத்தின் அட்டூழியங்கள்

வட-கிழக்கு மாகாணங்களில் முனிசிப்பல் கவுன்சில், அர்பன் கவுன்சில், பட்டின சபைப் பகுதிகளில் மட்டும் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப் பட்டிருப்பதாகக் கூறிக்கொண்டு, ராணுவத்தினரின் மூலம், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் மக்கள் நையப் புடைக்கப்படுகின்றனர்.

விளக்கு ஏற்றி வைத்திருக்கும் வீடுகள்மீது கல்மாரி பொழியப்படுகின்றது. ராணுவத்தினரின் சேஷ்டை இதுவாகும்.


அண்மையில் யாழ்ப்பாணத்தில் முடி வழக்குரைஞர் சிவபசுபதி வீட்டில் விளக்கேற்றி வைக்கப்பட்டிருந்தது. அவ்வீட்டுக்குள் புகுந்த ராணுவத்தினர் விளக்கை அணைக்கும்படி ஆணையிட்டனர். தாம் மறுநாள் பேசவேண்டிய வழக்குப் பற்றிப் படித்துக் கொண்டிருப்பதாக வழக்குரைஞர் சிவபசுபதி பதிலளித்தார். உடனே ராணுவத்தினர் மானஈனமாகத் தூஷித்து, விளக்கை அணைக்குமாறு நிர்ப்பந்தித்தனர். இது பற்றி, பிரதம நீதி அரசரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

கரையூரிலே சைக்கிளில் சென்ற ஒருவரை, ராணுவ மோட்டார் வாகனம் தட்டி வீழ்த்தியது. அதனை அந்தச் சைக்கிள்காரர் ஆட்சேபிக்கும் முகமாக அறிகுறிகள் காட்டியதும் காட்டாததுமாக, அந்த ராணுவத்தினர் அவரை நையப்புடைத்ததோடு, அக்கம் பக்கத்திலிருந்த சுமார் முப்பது பேரையும் கைது செய்து விட்டனர்.

நாவாந்துறையிலே, ஒரு பெண்மணியை ராணுவத்தினர் கடத்திச் சென்று, பன்னிரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் அவளை வீட்டில் கொண்டுவந்து விட்டனர்.

**இது இலங்கையின் பெண்குலத்துக்கே செய்யப்பட்ட பெரும் அநீதியாகும். பெண்மணி தலைமை தாங்கும் ஒரு நாட்டின் ஆட்சியிலே இப்படியும் நடைபெறுகிறது.**

பருத்தித்துறைப் பகுதியிலே, ஊரடங்குச் சட்ட நேரத்துக்குப் பின்னர், இரண்டு தொழிலாளர்கள் நையப்புடைக்கப்பட்டனர். இன்னுமொரு சம்பவம் — காது கேளாத சலவைத் தொழிலாளி ஒருவர் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரை 'நில்' என்று சொன்னது, இவருக்குக் கேட்கவில்லை. ஆனால் ராணுவத்தினரோ இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டனர். இதனைக் கண்ணால் கண்ட ஒரு பிரஜை



காலிமுக மைதானத்தில் ஐக்கிய மேதினக் கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா பேசிக்கொண்டிருக்கிறார்.

பின்னர் கைது செய்யப்பட்டார். இச் சம்பவம் பற்றி மஜிஸ்றேற் இராசதுரை விசாரணை செய்ததற்காக, அவரை உடனடியாகவே குருநாகலைக்கு இடமாற்றம் செய்துவிட்டனர்.

வல்வெட்டித்துறையிலே சில மீன்பிடித் தொழிலாளர்களுக்கும், ராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்ற வாக்குவாதம் காரணமாக ராணுவத்தினர் அங்குள்ள குடிசை ஒன்றுக்குத் தீ வைத்து விட்டனர்.

ராணுவத்தினர் கடைகளுக்குள் சென்று சிகரட் முதலிய சாமான்கள் வாங்குகின்றனர். பணம் கேட்டால், "பணத்தைச் செல்வநாயகத்திடம் வாங்கு" என்று அதட்டி விட்டுப் பணங் கொடாமல் செல்லுகின்றனர்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே இன்று, மத சம்பந்தப்பட்ட கிரியைகளைத் தன்னும் செய்ய முடியாமலிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஸ்பென்ஸர் செல்லையா என்பவரின் வீட்டுக்கு மூன்று தினங்களாகத் தொடர்ந்து கல் வீசப்பட்டது.

ராணுவத்தினரின் அட்டூழியங்களை ஆட்சேபித்து, அங்குள்ள மக்கள் யாருக்கு முறையிடுவது? யாழ்ப்பாணத்திலே ஸ்டான்லி ரோட்டிலுள்ள அப்புக்காத்து செல்லப்பா வீட்டுக்கு நான்கு தினங்களாகக் கல் வீசப்பட்டது. யாழ்ப்பாணம் முனிசிப்பல் கவுன்சில் அங்கத்தவரான இராசசூரியர் வீட்டுக்கும், நல்லூரைச் சேர்ந்த கனகசபாபதி வீட்டுக்கும், ஒரு மயிர் வினைஞர் வீட்டுக்கும் கல் வீசப்பட்டது. 40 வருடகாலமாக அந்த வீட்டில் வசித்த அந்த மயிர் வினைஞர், இறுதியில் தமது வீட்டை விட்டுவிட்டு ஓடி ஒளித்துவிட்டார்.

டிஸ்றிக்ற் நீதிபதிகளும், மஜிஸ்றேட்டுகளும் ராணுவத்தின் அட்டூழியங்களைப் பற்றி விசாரணை செய்ய முடியாமலிருக்கிறது.

ஏப்ரில் 27-ம் திகதியன்று, காங்கேசந்துறை விமான நிலையத்தில் உள்ள கம்பியில்லாத் தந்தி அதிகாரி ஒருவரை, இன்னொரு அதிகாரி ராணுவ உடைக்குள் புகுந்ததும், குரோதம் காரணமாக நையப்புடைத்தார்.

சாவகச்சேரியிலே, டிஸ்றிக் கோர்ட் பியோன் திரு. கைலாசபிள்ளை சைக்கிளில் சென்றபோது அவரை ராணுவத்தினர் ஈவிரக்கமின்றி உதைத்து நையப்புடைத்ததோடு, அவரின் சைக்கிளைத் தோளில் சுமந்து கொண்டு போகும்படி செய்தனர்.

பருத்தித்துறைப் பகுதியிலே, சைக்கிளில் சென்ற ஒருவரை ராணுவத்தினர் துரத்திப் பிடித்து, அவரை அடித்தனர். அவரின் சைக்கிளைத் தூக்கி வைத்திருக்க இணங்கிய அவரின் நண்பரையும் ராணுவத்தினர் நையப்புடைத்தனர். தனிப்பட்டவரின் கடையொன்றுக்குக் கல்வீசப்பட்டது. பருத்தித்துறையிலே, 'டெயிலி நியூஸ்' பத்திரிகை விற்பனை செய்த ஒருவரிடம் ராணுவத்தினர் பத்திரிகை கேட்டனர். பத்திரிகை கொடுத்துவிட்டுக் காசு கேட்டதும், அவரை ராணுவத்தினர் நையப்புடைத்தனர்.

இணுவில் பகுதியிலே ஒரு சப்போஸ்ட்மாஸ்டர் ஒருவரை ராணுவத்தினர் பலமாகத் தாக்கினர். சுண்ணாகத்திலே, ஊரடங்குச் சட்டம் இல்லாத அங்கு, ஒரு பிறக்டரை வழி மறித்து, "பாஸ் எங்கே?" என்று ராணுவத்தினர் கேட்டனர். "இங்கே ஊரடங்குச் சட்டம் இல்லை," என்று பிறக்டர் கூறினார். அதற்கு ராணுவத்தினர் "இது சுண்ணாகம் இல்லை. வல்வெட்டித்துறை" என்றனர். அதிஷ்டவசமாக அவ்விடத்தால் ஒரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் வந்தார். அவரின் தலையீட்டால் அந்தப் பிறக்டர் தப்பிப் பிழைத்தார்.

அளவெட்டிப் பகுதியிலே, ஏப்பிரில் 28-ந் திகதியன்று ஒரு பெண்மணி — ஏழு பிள்ளைகளுக்குத் தாய் — அவரின் கடைசிக் குழந்தைக்கு ஒரு மாசமும் ஆகவில்லை — அவரை



ராணுவத்தினர் பலவந்தம் செய்தனர். அந்தப் பெண்மணியின் வீட்டிலிருந்து 100 யாருக்கப்பால் உள்ள ஒரு வீட்டுக்குள் ராணுவத்தினர் புகுந்து 16 வயதுப் பெண்ணொன்றைக் கற்பழித்தனர். அப்பகுதியிலுள்ள பெண்கள் எல்லாரும் ஓடி ஒழித்துக் கொண்டனர்.

## திட்டமிட்ட செயல்

ஆம், ராணுவத்தினரது இந்த அட்டூழியங்கள் தானே சுயமாக எழுந்தவையல்ல. **இவை இலங்கை சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினால் திட்டமிட்டு, தமிழ் பேசும் மக்களை ஏளனப் படுத்த, இழிவு படுத்தச் செய்யப்பட்ட செயல்களாகும்.** இந் நாட்டிலே தமிழ்ச் சிறு பான்மையினரை இழிவு படுத்தச் செய்யப்பட்டவையாகும்.

புராதனப் பெருமை வாய்ந்தவர்கள் — தங்களுக்கென வரலாறு உள்ளவர்கள்—இந்த நாட்டில் சிறுபான்மையினராகவுள்ள தமிழ் பேசும் மக்களை எங்கள் கண்ணுக்கு முன்னால் அரசாங்கம் இப்படி இழிவு படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவில் உள்ள இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டிலே கண்டனக் குரல் எழுப்பிய பிரதமர் சிறிமாவின் நாக்கு, தமது சொந்த நாட்டிலே தமிழ் மக்கள் விஷயத்தில் ஸ்தம்பித்துவிட்டதேன்?

இந்த நாட்டின் தேசியத் தாயாரான பிரதமர் சிறிமா தமது தேசியப் புதல்விகளும் சகோதரிகளும் இப்படி ராணுவத்தினரால் பலாத்காரம் செய்யப்பட்டுக் கற்பழிக்கப் படுவதைக் கண்டு சகித்துக் கொண்டிருக்கிறாரா?

**பிரதமரே, தமிழ் மக்களை இழிவு படுத்துவது, இந்த நாட்டு மக்களை இழிவு படுத்துவதாக முடியும்.**

இந்த அநீதிகளுக் கெல்லாம் நீர் பதில் சொல்லியாகப் போகிறீர்.

சிறிமா அரசாங்கத்தின் அநீதிகளைத் தமிழர் சகிப்பாராயின் அவர்கள் வாழ்ந்தும் வாழாமற் போவது நல்லது.

## தடுப்புக் காவலில்

அடுத்தபடியாக பாராளுமன்ற அங்கத்தவர்களாக உள்ளவர்கள் உட்பட சுமார் 60 பேரை இன்று அரசாங்கம் தடுப்புக் காவலில் வைத்துள்ளது. இவர்களை விசாரணையின்றி அரசாங்கம் தடுப்புக் காவலில் வைத்திருக்கிறது. இவர்களின் மனைவிமார் இன்னும் இவர்களைச் சென்று பார்க்க முடியாமல் இருக்கிறது.

சபையோர்களே, இன்று தோன்றியுள்ளது மொழிப் பிரச்சனை மட்டுமல்ல. இது சிறுபான்மையோர் பிரச்சனையாகும். அரசாங்க சேவையிலே இன்று என்ன நடக்கின்றது? சிங்களவர்களுக்கும் தமிழருக்குமிடையில் உத்தியோக நியமன விஷயங்களில் பாரபட்சம் காண்பிக்கப்படுகின்றது. சிங்களவனாகவும் பௌத்தனாகவு முள்ளவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. அண்மையில் தொழில் கமிஷனர் நியமன விஷயத்தில் இந்தப் பாரபட்ச மனப்பான்மை பிரத்தியட்சமாயிற்று.

சிறுபான்மையினரின் பிரச்சனையைத் துப்பாக்கிக் குண்டுகளாலும் துப்பாக்கிச் சனியன்களாலும் தீர்க்க முடியாது என்பது அரசாங்கத்துக்கு நினைவிருக்கட்டும்.

**3. வைகாசி 3 ல் ஒத்திவைப்புப் பிரேரணையில் டாக்டர் என். எம். பெரேரா தீர்ப்புக் காண வேண்டியது அரசாங்கத்தின் கடமையென வற்புறுத்திப் பேசியது.**

**டாக்டர் என். எம். பெரேரா** (எழுந்தார்)

**சபாநாயகர்**

எங்களுக்கு இன்னும் 10 நிமிடங்கள் மட்டும் இருக்கின்றன. நீங்கள் 5 நிமிடங்களில் முடிக்க வேண்டும்.

**டாக்டர் என். எம். பெரேரா**

நான் 5 நிமிடங்களுக்கு மேல் பேசவில்லை.



## கூத்தின் வில்லன்

ஒரு விதத்தில், இவ்விவாதத்தினால் பெரும்பயனேற்படவில்லை. ஏனெனில், இவ்விவாதம் வேண்டுமென நாம் கோரியபொழுது இரண்டு காரணங்களிருந்தன. முதலாவதாக, நடைபெற்ற அட்டூழியங்களை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து அவை திரும்பவும் நடைபெறாமல் தடுக்க வேண்டும். மற்றைய மிக முக்கிய காரணம், அடுத்து அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பதை அறிவதற்காகும். உங்கள் கொள்கை என்ன? காலவரையின்றி அவசரகால நிலைமையை வைத்திருக்கப் போகிறீர்களா? இந்நிலையை எப்பொழுது நீக்கப் போகிறீர்கள்? அவசரகால நிலைமையின் எதிர்காலம் பற்றிய உங்கள் கருத்து என்ன? தீர்த்து வைக்கும் நோக்கமாக நீங்கள் செய்யப்போவது என்ன? ஒரு வகையில் இது ஒரு துரதிஷ்டமான விவாதமாகும். ஏனெனில், இக் **கூத்தின் "வில்லன்" — நிதி மந்திரி — இங்கில்லை.** இப்பிரச்சினையில் ஏற்பட்ட பாரிய நஷ்டங்களுக்கு ஒருவர் பொறுப்பாயிருப்பாரானால், அது இந்த நபராகும்; அவர் இன்று விடை பகர இங்கு இருந்திருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக, இப்பிரச்சினையில் வேறு கருத்துக்களையுடையவரென நான் கருதும் சபை முதல்வர் விடையிறுக்க இருக்கிறார். எனவே இது துரதிஷ்டமானதாகும். இவ்விடயம் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்புக் காணவேண்டிய — **அரசியல் தீர்ப்பு** — பிரச்சினை என அவர் சரியாகவும் நேர்மையாகவும் உணருகிறார் என நினைக்கிறேன். அப்பக்கத்திலுள்ள பல கௌரவ அங்கத்தவர்கள் அவ்வாறு உணருகிறார்களென நான் கருதுகிறேன். கௌரவ நுவரேலியா அங்கத்தவரை நான் பாராட்ட விரும்புகிறேன். மொழிப் பிரச்சினையில் எந்நாளும் அவர் மிகவும் நியாயமான, அடக்கமான உரை நிகழ்த்தியுள்ளார். அதுவே கடைப்பிடிக்க வேண்டிய சரியான நோக்கு என நினைக்கிறேன். மற்றைய அங்கத்தவர்கள் சிலரைக் கண்டு நான்

ஆச்சரியமடைகிறேன். எல்லா வகையான உணர்ச்சிகளை யும் தூண்டுவது சுலபமானது. அவற்றை அடக்குவதற்கு மார்க்கம் காணுவது எளிதல்ல

## ஒரே ஒரு தீர்ப்பு

எம்மிடம் ஒரு மார்க்கம் உண்டு; ஆனல் நாடு அதை நிராகரித்தது. நாம் அதை ஏற்கத் தயாராயிருக்கிறோம். அந்நிலையை ஏற்கிறோம். ஆனல் உங்களுடைய மாற்றுத் திட்டமென்ன? **தனிச் சிங்களம் என்ற ரீதியில் கதைப்பதில் பயனில்லை.** தமிழ் மக்கள் எல்லோரையும் உங்களால் கொல்ல முடியாது. அவர்களைத் துரத்தவோ, நீரில் மூழ் கடிக்கவோ உங்களால் முடியுமா? **நாம் இந்நாட்டில், வாழ வேண்டும். நாம் ஒரு தீர்ப்புக் காண வேண்டும்; ஓர் அரசி யல் தீர்ப்புத்தான் ஒரே ஒரு தீர்ப்பாகும்.** நாம் ஒன்று கூடி கலந்துரையாட வேண்டும். பேச்சு வார்த்தைக்கு மிகவும் உதவாத மனிதன் — நீதி அமைச்சர் — அப்பணிக்கு அனுப் பப்பட்டார். யாழ்ப்பாணத்தில் ஒன்று கூறிவிட்டு இங்கு இன்னொன்று செய்யும் அவர்தான் இப்பணியை ஆற்ற முடியாத ஒருவராகும். அப்படிப்பட்ட மனிதன் பேச்சு வார்த்தை மூலம் ஒரு தீர்ப்புக் காண்பார் என நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

4. வைகாசி 17ல் சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் அவ சரகால நிலைமை புதுப்பிக்கப் பட்டபொழுது டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அதை எதிர்த்துப் பேசியதில் சில பகுதிகள்:

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா

இந்நிலையில் உங்கள் அவசரகால நிலைமை என்பது கலப்பற்ற ஒரு நிலையான பொய்யாகும். உண்மையை எதிர் கொள்ளுவோமாக. ஒன்றும் நடைபெறவிட்டால், ஊர்க் காவல்புரியும் பகுதியினருக்கு எதிர்ப்பு இல்லாவிட்டால், மக்கள் அமைதியாகவும் ஒத்துழைத்தும் வாழ்ந்தால், எல்லா விடயங்களும் ஒழுங்காக நடைபெற்றால், பென்ஷன்



பணத்தைப் பெறுவோர் சென்று பெற்றால், வேதனங்கள் உடனுக்குடன் வட - கிழக்கு மாகாணங்களில் வழங்கப்பட் டால், (இலங்கையின் மற்றைய பகுதிகள் பலவற்றில் இல்லாதவாறு) பரிபாலனமும் வாழ்க்கையும் சுமுகமாக வும் அமைதியாகவும் நடைபெற்றால் — அதாவது, உரோந்து புரியும் இராணுவத்தினல் ஏற்படும் சிக்கல்களைத் தவிர — **அவசரகாலச் சட்டத்தை வைத்திருக்க வேண்டிய அவசர கால நிலைமை பற்றிய உங்கள் வரைவிலக்கணம் யாது?**

* * *

இன்று நாட்டிலிருக்கும் நிலைமைபற்றி அவர் (கௌரவ நிதி அமைச்சர்) சொன்னது அத்தனையும் உண்மையானல்— குறிப்பிட்ட ஒரு விதி பற்றி ஒருவர் என்ன நினைக்கிறர் என்பதல்லப் பிரச்சினை — **அவசரகாலச் சட்டம் முழுவதும் வாபஸாக்கப்பட்டு இருக்க வேண்டும்.**

* * *

சில உண்மைகளைக் கவனிப்போம். இந்த அவசரகால நிலைமை எவ்வளவு காலத்துக்குத் தொடர்ந்திருக்குமோ என எமக்குத் தெரியாது. எமக்கு ஒரு விடயம் தெரியும். அவசரகாலச் சட்ட ஆட்சியை நீடிப்பது எந்த அரசாங் கத்துக்கும் நல்ல வசதியாக இருக்கும். **வங்கி வேலைநிறுத் தமும், அதற்கு என்ன நடந்தது என்பதும் சிறந்த உதாரண மாகும்.**

* * *

அவசரகாலச் சட்ட ஆட்சி அவசரகால நிலைமையில் தங்கியுள்ளது. **அவசரகால ஆட்சியை நீடிப்பதுதான அவ சரகால நிலைமையை அகற்றுவதற்கு நீங்கள் கண்ட ஒரே ஒரு வழி?.** நீங்கள் கூறும்விடை வேறுவிதமாக உள்ளது. இச் சபையில் முன்பு நடைபெற்ற ஒரு விவாதத்தில் அரசாங் கத்தின் கௌரவ அமைச்சர்கள், உடுப்பிட்டி கௌரவ

அங்கத்தவரின் சொற்பொழிவை அவசரகாலச் சட்டம் நியாய மானது எனக்கூற உபயோகித்துள்ளனர்.

அவ்விவாதம் யாது? தனது சொந்த அனுபவத்திலிருந்து தோன்றிய உணர்ச்சி கொண்டு பேசிய உடுப்பிட்டித் தொகுதி கௌரவ அங்கத்தவர், அவசரகாலச் சட்டத்தை நீக்கினுல் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகும் எனச் சபையில் கூறினுர்.

•••○•••



# VI இராணுவ ஆட்சி ஒழிக!

1. ஜூலை 20-ல் சிம்மாசனப் பிரசங்கத்தின் பொழுது நடை பெற்ற விவாதத்தில் திரு. எட்மன்ட் சமரக்கொடி பேசியதில் சில பகுதிகள் :

## இராணுவ சர்வாதிகாரம்

### திரு. எட்மன்ட் சமரக்கொடி

இச்சபையே இந்நாட்டில் மிகப் பெரியசபை எனவும் இந்நாட்டுக்குப் பொறுப்புடைய விசேடசபை எனவும் கூறிக் கொள்ளுகிறோம். நாமே சட்டங்களை இயற்றுவோரும், தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற கோதாவில் இந்நாட்டின் பொறுப்புடையோருமாவோம். அது உண்மையா? அதுதான் உண்மையான நிலையா? அப்படி யாரும் கூறின் நான் அதை ஏற்க மறுக்கிறேன். இன்றையநிலை என்ன? சிறிமா பண்டார நாயக்கா அரசாங்கத்தின் இரண்டாவது சிம்மாசனப் பிர சங்கத்தை நாம் விவாதிக்கும் இந்நேரத்தில் வடகீழ் மாகா ணங்களின் பிரதிநிதிகள் ஏறத்தாழ எல்லோரும் மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அது உண்மையில்லையா? அந் நிலையின் அர்த்தம் என்ன? அதன் அர்த்தம் இதுதான் :— இந்நாட்டின் நிர்வாகம் நமது பொறுப்பில் இல்லை; இந் நாட்டிலே இராணுவம் ஆட்சிபுரிகிறது. சிறிமா பண்டார நாயக்கா அரசாங்கம், ஆட்சிப் பொறுப்பேற்று எட்டுமாத காலத்துக்குள், இச்சபைக்கும், பாராளுமன்றத்துக்கும் இருந்த அதிகாரம் இராணுவத்துக்கு மாற்றப்பட்டு, தற் போது இராணுவத்தின் சர்வாதிகார ஆட்சியே நடைபெறு கிறது. இது ஒரு மறுக்க முடியாத உண்மை. இவ்விரு மாகாணங்களிலும் உள்ள ஏறக்குறைய ஐந்து மாவட்டங் களில் இராணுவத்தினரின் சர்வாதிகாரம் நடைபெறுகின் றது. ஏனைய பகுதிகளில் மக்களின் ஜனநாயக உரிமைகள்

கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பேச்சுரிமை, கூடும் உரிமை போன்றன பலமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இன்று இவைகளை நாம் இச்சபையில் கூறலாம். ஆனால் நாளைக்கோ அல்லது இன்றும் கூட, இங்கே கூறுவதை நாம் வெளியில் கூறமுடியுமா? இல்லை ஐயா: அப்படி நாம் செய்வோமேயானால் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தப்படலாம்.

பொது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, எந்நேரமும் மறியலில் வைக்கப்படலாம். ஏனெனில் பொது மக்களால் தங்கள் வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அம்மக்களின் சம்மதம் இன்றியே இராணுவத்தினரின் சர்வாதிகாரத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல ஐயா:

சென்ற மூன்று மாதங்களாக அல்லது தொண்ணூறு நாட்களாக வடகீழ் மாகாணங்களில் இராணுவத்தினரின் ஆட்சி நடைபெறுகின்றது. அதன் பெறுபேறு என்ன? அந்த நிலையை விளக்கிப் பல சந்தர்ப்பங்களில் பேசியுள்ளோம். நூற்றுக் கணக்கான மக்கள், ஆண் பெண் உட்பட, சிறுபான்மைத் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தினராலும், பொலிஸ் படையினராலும், ஈவு இரக்கமின்றி தாக்கப்பட்டுள்ளனர். அவ்விடயங்களை நான் இச்சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். நேற்றையதினம் கூட ஒரு கௌரவ மேல்சபை அங்கத்தவர் மறு சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

## தடுப்புக் காவலுக்கு முடிவேயில்லையா?

சென்ற ஒரு மாதமாகப் பாராளுமன்றம் இடைக்கால லீவுக்காக ஒத்திகை முன்பு அவ்விடையங்களைப்பற்றி மேலும் பேசுவதற்குப், வேறும் சில விடயங்களை சபையின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கும், ஒரு சந்தர்ப்பத்தை உண்டுபண்ணப்



பல முயற்சிகள் செய்தும் பலிக்கவில்லை. வேறு என்ன இருக்கிறது? கௌரவ உப சபாநாயகர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல மக்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; இவர்கள் இப்படி எவ்வளவு காலத்துக்கு தடுப்புக் காவலில் வைக்கப்படுவர்? இது காலவரையற்ற தடுப்புக் காவலா? இது யுத்த காலமா? இல்லை ஐயா! இச்சபையின் உறுப்பினர்கள் விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கவேண்டிய அளவுக்கு இந்நாட்டில் என்ன நிலைமை ஏற்பட்டுள்ளது? தாம் பொது மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், என்று தம்பட்டம் அடிக்கும் ஆட்சியினரே இந் நாட்டு மக்கள் மீது சர்வாதிகாரத்தை திணித்துள்ளனரேயன்றி, வேறு எந்த நிலையும் இந்நாட்டில் ஏற்படவில்லை. இதுவே கண்டிப்பான உண்மை.

* * *

## போலி ஜனநாயகம்

இப்போது ஜனநாயக சோஷலிஸப் பாதையில் செல்லுகிறோம் என்ற பேச்சுக்கு வருவோம். ஆம்! அரசாங்கத்திட்டத்தை மாற்றி நாட்டை ஓர் குடியரசாக்கப் போகிறோம் என்ற தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர். ஆனால் எப்படி? அரசியல் திட்டத்தை எவ்வாறு மாற்றப்போகிறார்கள்? ஜனநாயகத்துக்கு விரோதமான அரசியல் திட்டத்தை மாற்றி ஜனநாயக ரீதியில் அமைக்கவல்ல. இல்லை, ஐயா. மேல் சபையும், வேறும் சில பாரதூரமான ஜனநாயகத்துக்கு விரோதமான உறுப்புக்கள் அப்படியே இருக்கும். மேல் சபையை அகற்றுகிறோம் என்று ஒரு காலத்தில் கூச்சலிட்டவர்களே இன்று அதை மறந்துவிட்டார்கள். காலத்துக்குதவாத, காலத்துக்கேற்காத, செனெற் சபையை வைத்துக்கொண்டு ஜனநாயக சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுகிறோம் என்று பிதற்றுகின்றனர்.

இந்த அரசியல் திட்டத்தின்கீழ் சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்க உத்தரவாதம் கிடையாது என்பதை யாவரும் அறிவர். இந் நாட்டில் உள்ள சிறுபான்மையோரின் உரிமைகள் அரசியல் அமைப்பின் மூலமே, சட்டபூர்வமாக பாதுகாக்கப்படும் என்பதைக் காட்டுவதற்கும் ஒன்றும் கிடையாது. இல்லை ஐயா, இலங்கையை குடியரசாக்கும் அளவுக்குத்தான் அவர்கள் அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்கப்போகிறார்கள்.

மேலும் ஐயா, நியாயமற்ற ஓர் பிரஜா உரிமைச் சட்டத்தினால், இந் நாட்டின் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படும் உரிமையையுடைய, இந் நாட்டில் உள்ள பிரசைகளுக்கு உள்ள அத்தனை வசதிகளையும் அனுபவிக்க வேண்டிய 7 1/2 லட்சம் மக்கள் தமது குடி உரிமையை இழந்து வருகின்றனர். அப் பிரச்சனைகளைக் கவனிக்கப் போவதில்லை. ஆட்சித் திட்டத்தை மாற்றுவதிலும் அந்த ஒரே ஒரு விடயத்தில்தான் அக்கறை காட்டுகின்றனர்.

**2. ஒதுக்கீட்டுமுறி முழுச்சபைக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்ட பொழுது, பிரதமரின் மானியத்தில் அடையாள வெட்டு விவாதிக்கப்பட்ட பொழுது, திரு. எட்மன்ட் சமரக்கொடி பேசியதில் சில பாகங்கள் :**

**திரு. எட்மன்ட் சமரக்கொடி**

அக்கிராசனர் அவர்களே, பிரதம மந்திரி சபைக்குச் சமுகம் தராமை ஒரு பிரச்சனை இல்லை; எங்களால் எந்த விதமான சூழ்நிலையையும் சமாளிக்க முடியும்; நான் இங்கிருக்கிறேன், என்று கூறும் பாராளுமன்றக் காரியதரிசி ஒருவர் இங்கு உண்டு. ஆனால் அவர் இப்போது இங்கு இல்லை. அவர் தனது இடத்தில் இல்லாமையைப்பற்றி நாங்கள் கேட்டபோது, "எனது கதிரையோடு கட்டுப்பட்டு இருக்க முடியுமா?" என்று கேட்டார். ஆனால் அவர்



பதிலை ஒட்டி நான் சொல்லவிரும்புவது யாதெனில், அவர் தனது கதிரையோடு கட்டுப்பட்டு இருக்க வேண்டியதில்லை. ஆனால் ஒரு மந்திரியின் கீழ் உள்ள விஷயங்கள் விவாதிக்கப்படும்போது, அம்மந்திரி கட்டுப்பட்டு இருக்க வேண்டித்தான் இருக்கும். எதிர்க்கட்சி அங்கத்தவர்களாகிய நாங்கள் சில மணித்தியாலங்கள் ஒரே இடத்தில் கட்டுப்பட்டு இருக்கிறோம். கௌரவ அங்கத்தவர்கள் இதை விளங்கிக்கொள்ள வேண்டும். தனது பொறுப்பில் உள்ள விஷயங்கள் ஆராயப்படும் போது ஒரு மந்திரி இவ்விதம் நடந்துகொள்ளக் கூடாது. அவரது கூற்றை நான் ஏற்க முடியாது.

அவசரகால நிலைபற்றிப் பேசிவிட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பேச விரும்புகின்றேன். கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி என் வினவுக்கு விடைதரத் தயாராக இருக்கவில்லை. உண்மைகளை முற்றும் அவர் தெரிந்திருக்கவில்லை. மதிப்பிற்குரிய அங்கத்தவர் ஒருவர் எத்தனைபேர் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள் என்று நேற்றுக்கேட்டார். பிரதம மந்திரிக்குப் பதிலாக விடைகூற இங்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் பாராளுமன்றக் காரியதரிசி ஒருவர், "இச்சபையின் அங்கத்தவர்கள் எத்தனைபேர், மற்றவர்கள் எத்தனைபேர் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள் என்று கூறமுடியாது" என்று சொல்வதைச் சிறிது நினைத்துப்பாருங்கள். இங்கு காலியாக இருக்கும் இடங்களைக் கொண்டு எத்தனை பேர் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லிவிடலாம். ஆனால் எத்தனைபேர் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள் என்று நாங்கள் அறியவேண்டும்.

இந்த இரகசியம் என்ன? இதை மறைக்க ஏதாவது காரணம் உண்டா? இந்த உண்மையை வெளியிடாமல் இருப்பதற்கு நியாயம் உண்டா? பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் வினாக்களுக்கு விடைகள் அறிவதற்கு நாங்கள் காத்திருக்கவேண்டும் என்பதற்கு ஏதும் நியாயம் உண்டா? எத்தனைபேர் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள் என்பதை

நீங்கள் ஏன் வெளியிடக்கூடாது? இவ்வினாவுக்கு விடை இல்லை. நான் போய் அறிந்து அறிவிக்கிறேன் என்று ஒரு பாராளுமன்றக் காரியதரிசி கூறுவது, மிகவும் திருப்தியீனமானது மட்டுமல்ல, வெறும் அசட்டுத்தனமானதும் கூட.

## தடுப்புக் காவலில்

தடுப்புக்காவல் விஷயமாக இச்சபையில் முன் சொல்லியதை மீண்டும் கூறுகின்றேன். கிட்டத்தட்ட மூன்றுவார காலமாகத் தடுப்புக்காவலில் இருப்பவர்களை யாரும் பார்க்க அனுமதிக்கப்பட வில்லை. திரிகோணமலையிலிருந்து இங்கு வந்து தடுப்புக்காவலில் இருக்கும் ஒருவரின் மனைவிக்காக நான் தலையிடவேண்டியதாயிற்று. "கடந்த மூன்று வாரங்களாக தடுப்புக்காவலில் இருப்பவரின் குடும்பத்தினரில் ஒருவரும் அவரைக்காண அனுமதிக்கப்படவில்லையா?" என்று அவரைக்கேட்டேன். 'ஆம்' என்றார். எனக்கு வியப்பாக இருந்தது. இப்படி எத்தனை படிகள் ஏறி இறங்கினேன். ஒரு மந்திரியிடமிருந்து மற்றொரு மந்திரியிடமாக அலைந்தேன்; ஒரு நிரந்தரக் காரியதரிசியிடமிருந்து மற்றொரு நிரந்தரக் காரியதரிசியிடம் சென்றேன். முடிவில் பிரதம மந்திரியின் காரியதரிசியிடம் தடுப்புக் காவலில் இருப்பவரின் மனைவி தனது கணவரைக்காண உத்தரவு வாங்கிக் கொடுத்தேன் என்பதை முன் இச்சபையில் கூறியிருக்கிறேன். "தடுப்புக் காவலில் இருப்பவர்களின் குடும்பத்தினரும் பிறரும் அவர்களைக் காணமுடியாத வகையில் தடைசெய்ய அரசாங்கத்துக்கு என்ன நியாயம் நீதி இருக்கிறது என்று கேட்கின்றேன்? யுத்தகாலத்திலே, இந்த நாட்டில் ஏகாதிபத்தியத்தின் இருள் சூழ்ந்த நிலையில் நானும் இச்சபை அங்கத்தவர்களில் மூவரும் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். மூன்று நாலு நாட்களில் வெலிக்கடை மறியற்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு, எங்கள் குடும்பத்தினரும், எங்கள் நியாயவாதிகளும் எங்களைச் சந்திக்க உத்தரவு தரப்பட்டிருந்தது. விரைவில் வாராவாரம் சந்திக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது.



சில பேச்சுவார்த்தைகளின் பின்பு, நான் இப்பிரச்சனையை இச்சபையில் எழுப்பியபின்பு, இரண்டுமாதங்கள் கடந்து சில ஒழுங்குகள் நடந்திருக்கின்றன என்பதை நான் அறிவேன். இதுதான் இந்த அரசாங்கம் நடத்தும் ஜனநாயகம் என்று கூறவிரும்புகின்றேன்.

## இதுதானா உங்கள் விசாரணை?

நான் இரண்டாம் முறையும், பல கொடுமைகள் செய்த கதையுடன், சபைக்கு வந்திருப்பதாக கனம் பாராளுமன்றக் காரியதரிசி கூறினார். இது ஒரு பழங்கதை. கொடுமைகளை இங்கு பிரலாபிக்க எத்தனிக்கவில்லை என்று பட்டவர்த்தனமாகக் கூறினேன். இதுசம்பந்தமாக ஒருவினாவை நான் கேட்டேன். பல விஷயங்களை இச்சபையில் கேட்டேன் என்றுதான் கூறினேன். கூறப்பட்ட இடங்களில், பெருந்தொகையான மக்கள் இராணுவத்தினராலும், பொலிசாராலும் காயப்படுத்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டுகளைப் பற்றிக் கேட்டேன். கற்பழிப்புப்பற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டை விரைவில் நான் திருத்தியும் கொண்டேன். காயப்பட்டவர்களையிட்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்? விசாரணைகள் நடத்தினீரா? குற்றச்சாட்டுகளை அலசி ஆராய்ந்ததுண்டா? என்றுநான் பாராளுமன்றக் காரியதரிசியைக் கேட்டபொழுது அவர் விடைதரவில்லை. விடைதரப்படவேண்டும் என்று நெருக்கப்பட்டபோது, "ஆம். உமக்கு எப்படித் தெரியும்? விசாரணைகள் நடத்தப்பட்டுக் கடிதங்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன" என்றார்.

இப்போது, அந்த மதிப்பிற்குரிய உதவி மந்திரி இங்கு இல்லை. நான் இதையிட்டு சில வினாக்கள் அவரைக்கேட்க வேண்டுமாகையால் அவர் இங்கு சமுகம் தருவதுமிக அவசியமாக இருந்திருக்க வேண்டும். அவருடைய விசாரணை என்ன? மக்கள் தாக்கப்பட்டார்கள், காயப்படுத்தப்பட்டார்கள் என்ற பல பாரதூரமான குற்றச்சாட்டுகளின்மேல் என்னவிதமான விசாரணைகள் நடத்தப்பட்டன? இந்த

விசாரணைதான் என்ன? என்று அறியவிரும்புகின்றேன். "நடந்தவற்றையிட்டு வருந்துகிறோம்" என்று காயப்பட்டவருக்கோ, அவர் குடும்பத்துக்கோ கடிதம் எழுதுவதுதான் விசாரணையா? "விசாரணை செய்தோம்; மேல் எதுவும் செய்ய முடியாமைக்கு வருந்துகிறோம்" என்று இராணுவத் தலைமை அதிகாரி கூறுவதுதான் உங்கள் விசாரணையா?

பொலிசு விசாரணைகள் எப்படிப்பட்டவை என்று எனக்குத் தெரியும். **சாதாரணமான காலங்களிலும், பாராளுமன்ற உறுப்பினராலோ, பொதுமக்களாலோ, பொலிசு உத்தியோகத்தர்களுக் கெதிராகச் செய்யப்படும் குற்றச்சாட்டுகளின்மேல் நடத்தப்படும் விசாரணைகள் எவ்வளவு திருப்தியீனமானவை என்பது எனக்குத் தெரியும்.** முறைப்பாடு செய்தவர் ஏ. எஸ். பீ. யினால் அழைக்கப்பட்டு குற்றவாளிக்குமுன் விசாரிக்கப்படுவதில்லை. பிராது எழுதப்பட்டதும் முறைப்பாடு செய்தவர் அனுப்பப்பட்டுவிடுவார். இந்த விதமான விசாரணைகள் தான் சாதாரண காலங்களிலேயே பொலிசு உத்தியோகத்தர்களுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றச்சாட்டுகளின்மேல் நடத்தப்படுவதாகும். இப்பொழுது அவசரகாலத்தில் நடத்தப்படும் விசாரணையைப்பற்றிச் சொல்லப்படுகிறது. மதிப்பிற்குரிய உதவி மந்திரி அவர்களைக்கேட்கிறேன்! குற்றவாளி கூப்பிடப்பட்டாரா? முறைப்பாடு செய்தவர் கூப்பிடப்பட்டாரா? சாட்சிகள் கொண்டுவரும்படி கேட்கப்பட்டாரா? இந்த விசாரணைகள் எங்கு நடந்தன? பதில் இல்லை. சொல்லப்படுவது பதிலே இல்லை.

## தோட்டத் தொழிலாளியின் உரிமைகள்

இந்தியர் பிரச்சினை எனப்படுவதை நோக்குவோம். **இது இந்தியர் பிரச்சினையல்ல. தோட்டத் தொழிலாளர் பிரச்சினை.** ஐந்து அல்லது ஆறு இலட்சம் தோட்டத் தொழிலாளர் இந்த நாட்டில் இருக்கிறார்கள். யூ. என். பி. ஆட்சிக் காலத்தில் சட்டமாக்கப்பட்ட அநீதியும், ஜனநாயகத்துக்கு முற்றும் முரண்பாடானதுமான பிரஜா உரிமைச் சட்டத்தை



பல வருடங்களாக அவர்கள் எதிர்த்து வருகிறார்கள். இச் சட்டத்தினால் இவர்களின் ஜனநாயக உரிமைகள் பிடுங்கப்பட்டு, நாடற்றவர் என்று வர்ணிக்கப்படும் ஒரு இனமாக்கப் பட்டிருக்கிறார்கள். இது யூ. என். பி. காலம் முதல் இருந்து வரும் ஒரு பழம் பிரச்சினையாகும். ஒவ்வொரு வருடமும் சிம்மாசனப் பிரசங்கத்தில், "இவ்விடயமாக இந்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும்" என்று கூறப்படுகிறது.

இந்த விவகாரம் இந்திய அரசாங்கத்தோடு அலசப்படுவதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது என்று சபையோருக்குச் சொல்லவிரும்புகின்றேன். இந்திய வம்சாவழியினர் யாராவது இந்தியாவுக்கே போகவிரும்பினால், அவர்களுக்குச் சகல வசதிகளும் உதவிகளும் கொடுக்கப்பட்டு, இந்திய அரசாங்கமும் இவர்கள் அங்கு வசிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யட்டும். இதற்கு யாதொரு மறுப்பும் இருக்க முடியாது. இம்மக்கள் தாங்களாகவே இந்தியா செல்ல விரும்பினால் இவ்விதம் செய்தல் மிக விரும்பத்தக்கதாகும்.

ஆனால், **இது ஒரு இந்தியப் பிரச்சினை அல்ல** என்று சொல்லவிரும்புகிறேன். **இது ஒரு இலங்கைப் பிரச்சினையாகும். இலங்கையில் பிறந்து வளர்ந்து இங்கு தொழில் செய்து, இந்த நாட்டின் செல்வத்தை உருவாக்கும் மக்களின் உரிமைகளைப்பற்றிய பிரச்சினையே இது.** இவர்கள் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். சென்ற ஆண்டு கனம் பிரதம மந்திரி இதையிட்டு நடைமுறை எடுக்கப்படும் என்றார்கள். கனம் உதவிமந்திரி இப்போது சொல்கிறார், "இதைப்பற்றி ஏதும் செய்யப்படும்" என்று. இதுவும் ஒரு கேள்விக்கு விடையாகப்போகிறது! இது முற்றும் திருப்தியீனமானது. இங்கும் கனம் உதவி மந்திரி 'சைவர்' புள்ளிதான் பெறுகிறார்.

இவைதான் நான் சொல்லக்கூடியவை. கனம் உதவி மந்திரி இங்கு இல்லாமையை இட்டு மனவருத்தப்படுகிறேன். நான் எழுப்பிய வினைக்களில் ஒன்றுக்காவது அவர் விடை கூறமுடியுமோ இல்லையோ தெரியாது. அவரின் அயலவர் இவ்வினைக்களை அவருக்குச் சொல்லிவைப்பார் என்று நம்புகிறேன்.

## முடிவுரை

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் இறுதிக் கட்டத்தில், (குழு நிலையில்) அவசரகால நிலையை வாபஸ்பெற வேண்டுமெனக் கோரி ஒரு பிரேரணைக்கான முன்னறிவித்தல் தோழர்கள் என். எம். பெரேரா, பேர்னட் சொய்ஸா, எட்மன்ட் சமரக்கொடி, மெரில் பேர்னந்து ஆகியோரால் கொடுக்கப்பட்டது. செப்டம்பர் மாதம் 29-ந் திகதி பிரேரணை விவாதிக்கப்பட்டது. கட்சி சார்பில் தோழர்கள் என். எம். பெரேரா, எட்மன்ட் சமரக்கொடி, பேர்னட் சொய்ஸா ஆகியோர் பேசினர். பிரேரணை பெயர் சொல்லி வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 41 வாக்குகளைச் சாதகமாகவும், 60 வாக்குகளைப் பாதகமாகவும் பெற்றுப் பிரேரணை தோல்வியடைந்தது.



ARLALAI
CHUNNAKAM
LIBRARY

விலை சதம் 25

" ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம் '